







1

பஸ் ஓட்டம் பிடித்தது. 'ஷேக்கல்முடி'யைத் தொட்டபோது சாயந்தரம் ஆறு மணி. சூரிய வெளிச்சத்தைச் சுருட்டி வாய்க்குள் போட்டுக்கொண்ட அந்த எஸ்டேட் பிரதேசம் பூராவும் இருட்டி- சாம்பல் நிறம் படிந்திருக்க - காற்று இழுத்துப்

போன பக்கம் அலைந்தது பனிப்புகை.

பஸ் நின்றது. கண்டக்டர் கத்தினார்.

"சார் சார் ஷேக்கல்முடி கேட்டது... சட்டு புட்டுன்னு இறங்குங்க..." பஸ்ஸின் முன்புற இருக்கையில் உட்கார்ந்திருந்த பவித்ரன்– தன் கால்களுக்கு கீழே இருந்த 'ஸூட்கேஸை' எடுத்துக்கொண்டு– பயணிகளுக்கு நடுவே நடந்து– படிக்கட்டுக்கு வந்தான்.

கண்டக்டர் எரிச்சல் பட்டார். "சீக்கிரமா வாங்க சார்... மாப்பிள்ளை அழைப்பு கார் நகர்ந்து வர்ற மாதிரி சாவகாசமா வர்றீங்க. உங்க ஒருத்தருக்காக பஸ் இவ்வளவு நேரம் நின்னா அவ்வளவுதான்..."

"ஸாரி கண்டக்டர்... நான் இந்தப் பக்கம் வர்றது இதுதான் முதல் தடவை. எந்த இடத்துல இறங்கறதுன்னு தெரியாமே அப்படியே உட்கார்ந்துட்டேன்..."

"சரி... சரி... இறங்குங்க! தாமதமா இறங்கறதுக்கு சமாதானம் சொல்லிட்டிருந்தா இன்னமும் தாமதமாகும்..."

பவித்ரன் கீழே இறங்கினான்.

"ரைட்..." கண்டக்டர் கத்த– பின்புறம் அடர்த்தியாய் புகை விட்டு பஸ் நகர்ந்தது. மறுகணம் பவித்ரன் 'ஸூட்கேஸை' கீழே வைத்துவிட்டு – குளிரை விரட்டுகிற மாதிரி உள்ளங்கைகளை ஒன்றோடு ஒன்று வைத்து– சூடுபறக்க தேய்த்துக்கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தான்.

ஷேக்கல்முடி – பட்டிக்காட்டுத்தனமாய் தெரிந்தது. இருட்டு கவிந்திருந்த அந்தப் பிராந்தியம் பூராவும் ஒரு வித அமானுஷ்ய அமைதியைச் சுமந்துகொண்டு நின்றது. சொற்பமாய் ஆள் நடமாட்டம். எங்கோ ஒரு மேட்டில்– ஒரு மனிதனின் தலை தெரியும். உற்றுப் பார்ப்பதற்குள் அந்தத் தலையும் மறைந்துவிடும்.

பவித்ரன் சூட்கேஸை எடுத்துக்கொண்டு மெல்ல நடந்தான். கொஞ்சம் தூரத்தில் ஒரு பெட்டிக்கடையும்– அதன் முகப்பில் பளிச்சிட்ட அரிக்கேன் விளக்கும் தெரிய– பவித்ரனின் மனசுக்குள் சிகரெட் பிடிக்கும் ஆசை எழுந்தது. பெட்டிக்கடையை நோக்கி மெதுவாய் நடை போட்டான்.

அந்த இருட்டுகிற நேரத்தில் ஷேக்கல்முடிக்கு வந்து இறங்கிய பவித்ரனுக்கு இருபத்தெட்டு வயது இருக்கலாம். சத்யராஜ் உயரம். மாநிறத்துக்கும், கறுப்புக்கும் மத்தியப்பட்ட நிறம். அம்சமான மீசை. அதை ஒழுங்காய் 'ட்ரிம்' செய்ததில் முகத்திற்கு நன்றாய் பொருந்தி போயிருந்தது. முரட்டுத்தனமான சட்டையிலும்– பேண்டிலும் கச்சிதமாய் அவனுடைய ஐம்பத்தி ஐந்து கிலோ உடம்பு திணித்திருந்தது.

பெட்டிக்கடையைத் தொட்டான் பவித்ரன். ஒரு வாழைப் பழத்தார். விட்டாய் ரகங்களை வயிற்றுக்குள் திணித்துக்கொண்ட நான்கைந்து கண்ணாடி ஜாடிகள். சிகரெட் பற்ற வைப்புக்காக – பலவீனமாய் எரியும் ஒரு



காடா விளக்கு. இவைகளுக்கு மத்தியில் ஸ்வெட்டரோடும், மப்ளரோடும் இருந்த அந்தக் கிழவன் இருமினான்.

"சிகரெட் இருக்கா...?"– பவித்ரன் கேட்டான், ஒரு ரகத்தின் பெயரைச் சொல்லி. கிழவன் இருமிக்கொண்டே 'இல்லையென்று' தலையாட்டினான்.

"வேறென்ன சிகரெட் இருக்கு...?"

கிழவன் பதில் சொன்னான்.

"சரி குடு..."– சில்லறையைத் தந்து சிகரெட் வாங்கி உதட்டுக்குக் கொடுத்து– கத்தரித்து போட்டிருந்த சிகரெட் அட்டையின் துணுக்கை எடுத்து – காடா விளக்கு நெருப்பில் காட்டி – சிகரெட்டின் தலைக்கு சூடு வைத்தான். அது அடர்த்தியாய் புகைந்தது.

வாய் நிறைய புகையை இழுத்து– வெளியே விட்ட பவித்ரன் அந்தக் கிழவனை ஏறிட்டான்.

"பெரியவரே..."

"ம்..."

"குருதியாறு எஸ்டேட்டுக்கு எந்த வழியா போகணும்?"

கிழவன் முகம் மாறினான். "குருதியாறு எஸ்டேட்டுக்கா...?"

"ஆமா..."

"அங்கே யாரைப் பார்க்கணும்...?"

"ருத்ரய்யா..."

அந்தக் கிழவன் உட்கார்ந்திருந்த இருக்கையைவிட்டு மெதுவாய் எழுந்து நின்றான். குரலில் கொஞ்சம் நடுக்கம் தொற்றிக்கொள்ள கேட்டான்.

"தம்பி, உனக்கு எந்த ஊரு...?"

"மெட்ராஸ்..."

"அந்த ருத்ரய்யாவை எதுக்காகப் பார்க்கப் போறே...?"

"அவங்க எஸ்டேட்டுக்கு ஒரு 'சூப்பர்வைசர்' வேணும்னு விளம்பரப்படுத்தி இருந்தாங்க. அதான் நேர்ல பார்த்துப் பேசிட்டு போலாம்னு வந்தேன்..."

"தம்பி..."– கிழவனின் குரல் நடுங்கியது.

"என்ன பெரியவரே...?"

"உனக்கு கல்யாணமாயிடுச்சா...?"

"இல்லே..."

"மெட்ராஸ்ல உனக்கு கிடைக்காத வேலையா...? இன்னும் கொஞ்ச நேரத்துல பொள்ளாச்சி போற பஸ் இங்கே வந்து நிற்கும். பேசாம ஏறிப் போயிடு..."

பவித்ரன் ஆச்சர்யப்பட்டான்.

"என்ன பெரியவரே... என்ன சொல்றீங்க...?"

"காரணம் எதுவும் என்னைக் கேட்காதே தம்பி. நீ யாரோ... யார் பெத்த புள்ளையோ எனக்குத் தெரியாது. உன்னோட நன்மைக்காக சொல்றேன். பேசாமே ஊர் பார்க்கப் போயிடு. இன்னொரு அரை மணி நேரத்துல பஸ் வந்துடும். நம்ம பெட்டிக்கடை வாசல்லேயே நிற்கும். ஏறிப் போயிடு..."

பவித்ரன் வழியும் சிகரெட் புகை வாயோடு சிரித்தான்.

"என்ன பெரியவரே... சின்னப் புள்ளைகளுக்கு பூச்சாண்டி காட்டுற மாதிரி எனக்கும் காட்டுறீங்க. அந்த எஸ்டேட்ல வேலைக்குப் போனா என்னாகும்...?"

"காரணத்தையெல்லாம் நான் சொல்லிட்டிருக்க முடியாது தம்பி, பின்னாடி ஏதாச்சும் பிரச்சினை வரலாம். நான் கடையை மூடிட்டு போற நேரம் வந்தாச்சு. கிளம்பறேன். நீ அங்கே வேலைக்கு போறதும், போகாததும் உன்னோட இஷ்டம்..."

சொல்லிக்கொண்டே கிழவன் கடையை அடைக்க ஆரம்பித்தான். நிமிட நேரத்தில் கடையை அடைத்துவிட்டு, ஒரு காக்கி பையோடு கிளம்பினான்.

கிழவனை மறித்த மாதிரி நின்றுகொண்டான் பவித்ரன்.

"என்ன பெரியவரே... என்னமோ சொல்ல வந்தீங்க. அப்புறம் எதுவும் சொல்லாம கிளம்பிப் போறீங்க...?"

கிழவன் நின்று பவித்ரனை ஏற இறங்கப் பார்த்தான். "தம்பி... அதோ! அந்த மேடு ஏறி இறங்கிற இடத்தில் ஒரு டீக்கடை வரும். அங்க போய் நீ போக வேண்டிய இடத்தை விசாரிச்சுக்கோ... என்னை விட்டுடு தம்பி..."

கிழவன் மப்ளரை கழுத்துக்கு சரியாய் சுற்றிக்கொண்டு நடக்க ஆரம்பித்தான். நடந்து போகிற கிழவனையே சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்த பவித்ரன்– திரும்பி அந்த மேட்டை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

'அந்தக் கிழவன் என்ன சொல்ல வந்தான்...? சொல்ல வந்தவன் அப்புறம் ஏன் சொல்லாமல் போகிறான்...?'– யோசித்துக்கொண்டே நடந்தான். இருட்டின் அடர்த்தி இப்போது கூடி இருந்தது. மனசுக்குள் ஒரு பயம் பிறக்க – சுற்றும் முற்றும் பார்த்தபடி மேடு ஏறினான்.

சற்று உயரமான மேடு. ஏற ஏற – மூச்சு வாங்கியது.

மேட்டின் உச்சியில் சிறிது நேரம் நின்றான். மலைச்சரிவுகளில் இருந்த வீடுகளில் – எரிந்த மின்சார விளக்குகள் சின்னச் சின்ன வெளிச்சப் பொட்டுகளாய் தெரிந்தன.

ரோட்டுச் சரிவில் இறங்கினான் பவித்ரன்.

அந்த டீக்கடை வந்தது. பாய்லர் அடியில் நெருப்பு சிவப்பாய் தெரிந்தது. ஆட்கள் யாருமில்லாமல் வெறிச்சோடிப் போயிருந்த டீக்கடையை நெருங்கி நின்றான். உள்ளே இருந்த கல்லாவில் உட்கார்ந்து கோழித் தூக்கம் போட



முயன்றுகொண்டிருந்த அந்த ஆள், பவித்ரனைப் பார்த்ததும் எழுந்தான். கலைந்த தலை. அழுக்கு ஸ்வெட்டர். ஒடிசலான தேகம்.

"என்ன சார், டீயா...?"

"ஆமா..." என்றான் பவித்ரன்.

"உள்ளே வந்து உட்காருங்க சார். டீ லைட்டா... ஸ்டிராங்கா...?"

"ஸ்டிராங்..."

அவன் பாய்லர் அருகே போய் – ஒரு கண்ணாடி டம்ளரில் வெந்நீர் பிடித்து கழுவிவிட்டு– டிகாஷனில் பாலைக் கலந்து– அதை ஸ்பூன் சர்க்கரையைப் போட்டு கலக்கிக்கொண்டே பவித்ரனிடம் வந்தான்.

"என்ன சார், பொள்ளாச்சி பஸ்ஸா...?"

"இல்லேப்பா... ஷேக்கல்முடிக்கு இப்பத்தான் வந்து இறங்கறேன்..."

"உங்க சொந்த ஊர் இதா...?"

"ஊஹூம்... வேலை பார்க்க வந்த ஊர்..."

"வேலை பார்க்க வந்தீங்களா... எங்கே?"

"குருதியாறு எஸ்டேட்ல...! நான் ஊருக்கு புதுசு. அந்த எஸ்டேட்டுக்கு எப்படிப் போகணும்...?"

அந்த ஆள் திக்கென்று நிமிர்ந்தான். பார்வையில் பயம் நிறைந்திருந்தது.

"எந்த எஸ்டேட்னு சொன்னீங்க. குருதியாறு எஸ்டேட்டா...?"

"ஆமா..." தலையாட்டிக்கொண்டே டீக்கடை ஆளின் முகத்தை உன்னிப்பாய் பார்த்தான், பவித்ரன். அவன் முகம் அதற்குள் வியர்த்துப் போயிருந்தது.

"அந்த எஸ்டேட்ல யாரைப் பார்க்கப் போறீங்க...?"

"ருத்ரய்யாவை!"

"வேலைக்கு சேர மனு போட்டீங்களா...?"

"மனுவைக் கையோட கொண்டு வந்திருக்கேன். நேர்ல பார்த்து பேசி முடிவு பண்ணத்தான் வந்தேன். எஸ்டேட்டுக்கு எப்படி வழி...?" – டீயை உறிஞ்சினான் பவித்ரன்.

"சார்..."

"ம்..."

"அந்த எஸ்டேட்டைப் பத்தி உங்களுக்கு விபரம் தெரியலை. அதனால வந்துட்டீங்க. விபரம் தெரிஞ்சா நீங்க அங்கே போகமாட்டீங்க..."

"என்ன விபரம்...? நீதான் சொல்லேன்..."– ஆர்வமானான் பவித்ரன்.

அவன் தயங்கினான்.

"சொல்லப்பா..."

"இதுக்கு முன்னாடி அந்த எஸ்டேட்டுக்கு ரெண்டு 'சூப்பர்வைசர்' வந்தாங்க. இதே மாதிரி என்னோட மக்கடைக்கு வந்து டீ குடிச்சாங்க. வேலைக்கு சேரப் போனாங்க. போனவங்க போனவங்கதான்... உயிரோட திரும்பி வரலை..."

"ஏன்... என்னாச்சு...?"- டீ தொண்டைக்குள் இறங்க மறுத்தது.

"என்னாச்சுன்னு தெரியலை... ஒருத்தர் 'கரண்டு'ல சிக்கி செத்தாரு... குறுகியாத்துல பொணமாக கெடந்தாரு. இன்னொருத்தர்..."

"ரெண்டுமே விபத்துதானே...?"

"போலீஸ் அப்படித்தான் சொன்னாங்க. ஆனா, ஊர் ஜனங்க யாரும் நம்பலை..."

"கொலைன்னு சொல்லுறாங்களா...?"

"அப்படின்னு நான் சொல்லமாட்டேன். சொன்னதாவும் வெளியே மூச்சு காட்டிடாதீங்க. அப்புறம் நான்தான் வம்புல மாட்டிக்குவேன்..."

டீயைக் குடித்துவிட்டு எழுந்தான் பவித்ரன்.

"டீக்கு எவ்வளவு காசு...?"

"இந்து ரூபாய் காசை எடுத்துக்கொண்டு – கல்லாவை நெருங்கினான் பவித்ரன். காசை கல்லா மேசையில் வைத்தபடியே கேட்டான்.

"அந்த எஸ்டேட்டுக்கு எப்படிப் போகணும்?"

"நான் இவ்வளவு சொல்லியும் போறீங்களா சார்?"

"நான் போறதா முடிவு பண்ணிட்டேன். நீ வழியைச் சொல்லு..."

அவன் தயங்கித் தயங்கி வழி சொன்னான்.

## 2

**ப**னி மெலிதாய் பெய்துகொண்டிருந்த– அந்த ஆறரை மணி நேர அந்தி நேரத்தில் மலைச்சரிவில் வளைந்து வளைந்து போயிருந்த பாதையில் நிதானமாய் நடக்க ஆரம்பித்தான் பவித்ரன்.

மலைச்சரிவு முழுவதும்– சதுர சதுரமான பாத்திகளில் பெயர் தெரியாத தோட்டப் பயிர்கள் ஆரோக்கியமாய் இருந்தன. அவன் பஸ்ஸில் வந்து இறங்கிய அந்த நிமிஷத்தைவிட இந்த நிமிஷம் காற்றில் குளிர் ஏறி இருந்தது. மூக்கு, காதுகளின் நுனிகள் ஐஸ்கட்டி மாதிரி குளிர்ந்து போயிருந்தன.

பவித்ரன் நடந்தான்.

அந்த டீக்கடை ஆள் சொன்ன மாதிரி வழி பூராவும் இருட்டாக தெரிந்தது.



வழியில் சில இடங்களில் பனி அடர்த்தியாய் உட்கார்ந்திருந்தது.

சுத்தமாய் ஒரு கிலோ மீட்டர் தூரம் நடந்த பிறகு–மரங்களுக்கு மத்தியில்– அந்தப் பழங்கால பங்களா தெரிந்தது. ஒரேயொரு ஜன்னல் மட்டும் வெளிச்சத்தில் பார்வையில் பட– மற்ற ஜன்னல்களெல்லாம் இருட்டில் இருந்தன.

பங்களாவுக்கு அரண் போட்ட மாதிரி– முள் வேலி தெரிய அதைச் சுற்றிக்கொண்டு போனான்.

மரச் சட்டங்களால் ஆன 'கேட்' வந்தது. அதன் ஓரமாய் காவலாளி கூண்டு தெரிந்தது. அதில் யாரோ உட்கார்ந்து புகை பிடித்துக்கொண்டு இருந்தார்கள்.

கேட்டுக்கு முன்பாக வந்து நின்றான் பவித்ரன். மரச் சட்டத்தை 'டொக்' என்று கையால் தட்டினான்.

அந்த உருவம் அசையாமல் கூண்டுக்குள் உட்கார்ந்திருந்தது.

"சார்..." குரல் கொடுத்தான்.

"........"

"சார்..."

பவித்ரன் கொடுத்த குரலுக்கு– பதிலாக புகை மட்டும் கூண்டுக்குள் இருந்து வந்தது. பவித்ரன் 'கேட்'டை பலமாய் தட்டி "சார்" என்று கத்தினான்.

கூண்டுக்குள் எந்த அசைவும் இல்லை. புகை மட்டும் வெளியேறிக்கொண்டே இருந்தது.

'ஒருவேளை வாட்ச்மேனுக்கு காது செவிடோ...!'

பவித்ரன் பொறுமையில்லாமல் 'கேட்'டை எக்கிப் பார்த்தான். 'கேட்'டின் உள் பக்கமாய் தாழ்ப்பாள் கழண்டிருக்கவே தள்ளினான்.

காதுக்குப் பிடிக்காத சத்தத்தோடு 'கிர்ர்ர்' என்று 'கேட்' உள்ளே போக – பவித்ரன் 'பிரீப்கேஸை' எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான். மெதுவாய் நடந்தான். கூண்டை நெருங்க... நெருங்க –

சுருட்டு வாசம் குப்பென்று அடித்தது. கூண்டை நெருங்கி உள்ளே எட்டிப் பார்த்தான். கூண்டுக்குள் யாரோ சாய்ந்து உட்கார்ந்திருந்தார்கள். இருட்டில் முகம் தெரிய மறுத்தது.

"சார்..."

சொல்லிக்கொண்டே – தன் பேண்ட் பாக்கெட்டில் இருந்த தீப்பெட்டியை உருவி எடுத்து– தீக்குச்சியைப் பற்ற வைத்து– ஒரு சின்ன நெருப்புப் பிழம்பை உண்டாக்கினான். அந்த வெளிச்சப் பிழம்பை கூண்டுக்குள் கொண்டு போய், அதன் இருட்டை விரட்டிப் பார்த்தான்.

இதயம் ஒரு முறை உதறிக்கொண்டது– உள்ளே காக்கி உடையில் இருந்த அந்தக் காவலாளி கிழவன், கூண்டுக்குள் சாய்ந்து கால்களை

வெளியே நீட்டி இருந்தான். கண்கள் வெறித்துப் பார்க்க– கைகள் தொய்ந்து போயிருந்தன. வாயில் இருந்த சுருட்டு மட்டும் உயிரோடு கனன்று புகையை வளர்த்தது.

"சார்..."– அவரைத் தொட்டான் பவித்ரன்.

கிழவன் ஒரு பக்கமாய் சாய – சுருட்டு கூண்டுக்கு வெளியே எகிறி விழுந்தது.

## 3

அந்தக் குளிரிலும் ஒரு முறை குப்பென்று நனைந்து போனான் பவித்ரன். சுற்றும் முற்றும் பார்த்தான். மரங்களுக்குப் பின்னால் தெரிந்த அந்தப் பங்களாவும் – சுற்றுப்புறமும் அவனுடைய அடிவயிற்றில் ஒரு திகில் விதையை ஊன்றியது.

தீக்குச்சியை மறுபடியும் உரசினான். அதனுடைய வெளிச்சத் தலையை கீழே தாழ்த்தி – காவலாளியைப் புரட்டிப் பார்த்தான்.

வலது பக்க இடுப்பில் – கெட்டியாய் ரத்தம் உறைந்து போய்– ஆழமான கத்திக்குத்து காயம் தெரிந்தது. கூண்டுக்குள் ரத்தம் கொட்டிக் கிடந்தது.

பதற்றமாய் நிமிர்ந்தான் பவித்ரன். பங்களாவுக்குள் இருப்பவர்களுக்கு காவலாளியின் இந்த மரணம் தெரியுமா?

காவலாளியை அப்படியே கிடத்திவிட்டு, உள்ளே ஓடினான். 'கேட்'டில் இருந்து பங்களாவின் நூறு மீட்டர் தூரத்தில் 'போர்டிகோ' இருந்தது. இருட்டாய் இருந்த அதன் வயிற்றுக்குள் அந்த கார் நின்றிருந்தது. இரண்டு பெயர் தெரியாத மரங்கள் இரு பக்கமும் சோலையாய் வளர்ந்திருந்தன.

தயக்கமாய் 'போர்டிகோ'வுக்குள் நுழைந்து – காரைச் சுற்றிக்கொண்டு படியேறி– வாசல் கதவுக்கு வந்தான். கதவின் மேல் கையை வைக்க– அது இறுக்கமாய்ச் சாத்தி கிடந்தது. தலையை உயர்த்தி அழைப்பு மணியைத் தேடினான்.

அது கண்ணுக்குத் தட்டுப்பட மறுத்தது. இரண்டு கைகளாலும் கதவின் மேற்புற மரச் சட்டங்களைத் தடவியவனின் காதுகளில் அந்த உறுமல் சத்தம் கேட்டது.

'உர்ர்ர்ர்'

சரேலென திரும்பிப் பார்த்தான் பவித்ரன்.

உடம்புக்குள் அதிர்ச்சி அடித்தது.

ஒரு ஆளின் இடுப்பு உயரத்திற்கு வளர்ந்திருந்த அந்தக் கறுப்பு நிற சாதி நாய்– தன் அரையடி நாக்கை நீர் சொட்ட தொங்கப் போட்டுக் கொண்டு



# இதயம் பேசுகிறது

## நெகிழ வைத்தது



வித்யா சுப்ரமணியம் எழுதிய 'கல்யாணப் பூக்கள்' நாவல், நெஞ்சம் நெகிழ வைத்த பாசக் காவியம்.

– டி.ஆர்.ராம்குமார், கோவை.

ஒரே கதையில் குடும்பம் – பாசம் – கடமை– பொறுப்பு– உழைப்பு – வெற்றி என பலப் பல மலர்கள் பூத்துக் குலுங்கியது பூரிப்பாக இருந்தது.

–ஆர். ஆர். உமா, செல்வகுரூர்.

மொட்டான பூக்கள் பூத்து மணம் வீசுவதைப் போல் உள்ளத்தில் மணம் வீசிச் சென்றது நாவல்.

– வி.எஸ். மோகன், மதுரை.

கதாநாயகி வந்தனாவிற்கு விதவைக் கோலத்தை தராமல் மாமனாரும், மாமியாரும் அவளுக்கு மறுமணம் செய்து வாழ வைத்தது புதுமைப் புரட்சி.

–ம. வசந்தா,கச்சிராயபாளையம்.

குடும்ப மணம் கமழும் குதூகலமான பூக்கள்.

– அயன்புரம் த.சத்தியநாராயணன்.

கதையின் முடிவில் ஆனந்தப் பூக்களைச் சிந்த வைத்தமைக்கு மணம் நிறைந்த பாராட்டுகள்.

–எஸ். விஜயலட்சுமி, சென்னை.

இந்த நாவலின் மணம், நிறைய காலத்திற்கு நினைவில் நிற்கும். தலுக்குதலும் அருமை.

–இ. குமுதா, சேலம்.

நாவலைப் படித்துவிட்டு, உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள்,
முகவரி: **இதயம் பேசுகிறது, 'ராணி முத்து', சென்னை–600 007.**

## கனவு + ஓய்வு

தூங்கும்போது மனிதனைப் போலவே பூனைக்கும் கனவு வரும். கனவின் போது மீசை துடிக்குமாம்.

நமக்கு தூக்கத்தில் எல்லா உறுப்புகளும் ஒரே நேரத்தில் ஓய்வெடுப்பதில்லை. முதலில் கண்கள், பின் காது, தோல் என ஒவ்வொன்றாக ஓய்வெடுக்கும். இயங்கிக்கொண்டே இருப்பது இதயம் மட்டும்தான்.

–பி.எஸ்.ஜேம்ஸ், தூத்துக்குடி.



"எங்க வீட்டில் எப்பவும் தீபாவளிதான்."

"எப்படி சொல்றீங்க?"

"என் மனைவி, பட்டாசாட்டம் வெடிச்சுக்கிட்டே இருப்பா!"

– அ. ராதா, பொன்னன்திட்டு.

"என் பொண்ணு தரையில் கால் படாம நடப்பா."

"........"

– லெ.நா. சிவகுமார், சென்னை.





"ஏன் மகாராணியார் போருக்குப் போகிறார்?"

"மன்னர் இதுவரை பதினெட்டு முறை புறமுதுகிட்டு ஓடி வந்துவிட்டாராம்."

– அனு. அரங்கவிட்டல், கோவை.



– தன் கூர் பற்களை இளித்துக் காட்டியது. அங்குலம் அங்குலமாய் அவனை நோக்கி முன்னேறியது.

பவித்ரன் பின் வாங்கினான். கையில் இருந்த 'பிரீப்கேஸை'க் காட்டி அதன் முகத்தை தாக்குவது போல் பாவலா செய்ய– அந்த நாய் ஆக்கிரோஷமாக- குபீர் என்று பவித்ரனை நோக்கிப் பாய்ந்தது.

சூட்கேஸால் அதன் தலையை 'தொம்' என்று மொத்தினான். நாய் 'லொள்' என்று ஒரு அகரக் குரைப்பு குரைத்து– பின்னுக்கு ஓடி, மறுபடியும் பவித்ரனை தாக்க ஓடி வந்தது.

'என்ன செய்யலாம்? ஓடலாமா...?'

'ஓடினால் உடம்பின் பாதி சதையை இதற்கு கொடுத்துவிட வேண்டியதுதான்'– யோசித்துக்கொண்டு இருக்கும்போதே–

"ஏய் டெவில்... கீப் கொய்ட்..."– ஒரு பெண்ணின் குரல் பின் பக்கமிருந்து கேட்டது. பவித்ரன் திரும்பினான்.

கதவுக்கு பக்கவாட்டில் இருந்த ஜன்னலில் அந்தச் சிறுமியின் உருவம் தெரிந்தது. பனிச்சென்ற அழகான முகம். பெரிய கண்களில் நாயை கோபமாய் பார்த்தாள். அவளுடைய பார்வைக்கும், பேச்சுக்கும் கட்டுப்பட்ட நாய்– அப்படியே மண்டியிட்டு முன்னங்கால்களை மடக்கிக்கொண்டு உட்கார்ந்தது.

"யார் மாமா நீங்க! என்ன வேணும்?"

"நான் சென்னையில் இருந்து வர்றேன் பாப்பா. ருத்ரய்யா இருக்காரா...?"

"ஓ... தாத்தாவைப் பார்க்க வந்தீங்களா? இருங்க வர்றேன்" என்றவள், ஓடி வந்து கதவின் தாழ்ப்பாளை விலக்கித் திறந்தாள்.

"உள்ளே வாங்க மாமா..."

"தாத்தாவை நான் அவசரமா பார்க்கணும் பாப்பா. அவர் இருக்காரான்னு சொல்ல முடியுமா...?"

"தாத்தா மாடியிலதான் இருப்பார்..."

"அவரை வரச் சொல்லு பாப்பா..."

"தாத்தாவால கீழே இறங்கி வர முடியாது..."

"ஏன்...!"

"நடக்க முடியாது..."

"வீட்ல வேற யார் இருக்கா பாப்பா...!"

"பாட்டி, அப்பா, சித்தப்பா, சித்தி, அத்தை எல்லாருமே இருக்காங்க. மாடியில உட்கார்ந்து டி.வி பார்த்திட்டிருக்காங்க..."

"உங்க அப்பாவைப் போய் கொஞ்சம் வரச் சொல்லு பாப்பா..."

"அப்படி அந்த சோபாவில் உட்காருங்க மாமா. நிமிஷத்துல போய்

கூட்டிட்டு வந்துடறேன்..."- அந்தச் சிறுமி கடல் போல் பரந்திருந்த ஹாலில் ஓடி, மாடிப் படிகளில் ஏறி மேலே போனாள்.

பவித்ரன் நின்றபடியே அந்த ஹாலைப் பார்வையால் சுழலவிட்டான். சமஸ்தான ராஜாக்களின் கொலு மண்டபம் மாதிரி அமர்க்களம். புகை படிந்த பாணியில் சுவர்களில் பழமையான ஓவியங்கள். ஹாலின் விதானங்களில் இருந்து சரம் சரமாய் லஸ்தர் விளக்குகள் வெளிச்சம் காட்டாமல் தொங்கின. ஹாலின் எதிர்ப்புறச் சுவரில் பாடம் செய்து வைக்கப்பட்ட மான் தலையும், யானைத் தலையும் பீங்கான் கண்களால் பவித்ரனையே பார்த்தன. தரைப் பரப்பு பூராவும் சிவப்பாய் கம்பளம் பரப்பி இருந்தார்கள்.

படிகளில் யாரோ இறங்கி வரும் சத்தம் கேட்டது. பார்வையை மாடிப் பக்கமாய் திருப்பினான் பவித்ரன்.

மெலிதான நீல வர்ண பைஜாமாவிலும், வெள்ளை வெளேரென்ற தொள தொள ஜிப்பாவிலும் அந்த முப்பது வயது இளைஞன் வந்துகொண்டிருந்தான். நல்ல நிறம். சராசரி உயரம். காற்றில் சுலபமாய் கலைந்துவிடுகிற கிராப். தொப்பை உடம்பு. ஊடுருவுகிற பார்வை.

பவித்ரனையே பார்த்தபடி நடைபோட்டு அவனை நெருங்கினான். மெல்லிய குரலில் கேட்டான்.

"யார் நீங்க...?"

"சார் எம் பேர் பவித்ரன். சென்னையில் இருந்து வர்றேன்... நீங்க கொடுத்திருந்த விளம்பரத்தைப் பார்த்தேன்..."

"ஓ... சூப்பர்வைஸர் வேலைக்கா...?"

"ஆமா சார்..."

"வேலை கேட்டு இந்த நேரத்துக்கு எந்த முட்டாளும் வரமாட்டான். நீ இந்நேரத்துக்கு வந்திருக்கே?"

"காலையில புறப்பட்டேன் சார்... கோவை எக்ஸ்பிரஸ் ரெண்டு மணி நேரம் லேட். கோயமுத்தூரில் இருந்து பஸ் பிடிச்சி- இங்கே வர நேரமாயிடுச்சு. சார்... இங்கே வந்ததுமே ஒரு அதிர்ச்சி. உங்க பங்களா 'கேட்'ல இருந்த வாட்ச்மேனை யாரோ குத்திக் கொன்னிருக்காங்க..."

"என்ன உளர்றே...?"

"நிஜமாத்தான் சார் சொல்றேன்... வந்து பாருங்க..."

அந்த இளைஞன் பதற்றமானான்.

"வா, போய்ப் பார்க்கலாம்..."

பவித்ரனோடு இணைந்து வேகவேகமாய் வெளியே வந்தான் இளைஞன். அந்தச் சிறுமியும் அரக்க பரக்க வந்தாள். பவித்ரனிடம் மறுபடியும் கேட்டான் இளைஞன்.

"நீ எப்போ பார்த்தே...?"



"இப்பத்தான் சார்... அடிவயித்துல கத்தியாலே குத்தி இருக்காங்க. பொணத்தை கூண்டுக்குள்ளே உட்கார வெச்சு... வாயில சுருட்டைப் பத்த வெச்சுட்டுப் போயிருக்காங்க சார்..."

முழுசாய் ஒரு நிமிட நடைக்குப் பின்-

கூண்டை நெருங்கினார்கள். கூண்டு இருட்டாய் இருந்தது. இளைஞன் கூண்டுக்குள் கையை நுழைத்து, ஒரு சுவிட்சைப் போட- நாற்பது வாட்ஸ் வெளிச்சம் கூண்டு பூராவும் நிரம்பியது.

கிழவன் இன்னமும் அதே கோலத்தில் கிடந்தான். அவனுக்கு கொஞ்சம் தள்ளி- சாவகாசமாய் புகைந்துகொண்டிருந்தது சுருட்டு. இளைஞனையும், பவித்ரனையும் தள்ளிக்கொண்டு - அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்த இடைவெளியில் எட்டிப் பார்த்த சிறுமி வீறிட்டாள்.

"ஜோதி... நீ பார்க்காதே... உள்ளே போயிடு..."

அவள் உள்ளே ஓடினாள் கத்திக்கொண்டே..!

"பாட்டி... தாத்தா... சித்தி... அத்தே... வாட்ச்மேன் தாத்தாவை யாரோ கொன்னுட்டாங்க. வாங்க... எல்லாரும் வாங்க..."- அவள் கத்திக் கொண்டே ஓட- அந்த நாயும் அவள் பின்னால் மூச்சிரைக்க ஓடியது.

## 4

அவர்கள் எல்லோரும் திமுதிமுவென்று ஓடி வந்தார்கள்.

முதலில் ஐம்பது வயதில் அந்த அம்மாள். பிறகு சிறுமி ஜோதி ஓடி வந்தாள். அவளைத் தொடர்ந்து இருபத்தைந்து வயதுகளில் இரண்டு இளைஞர்கள். அவர்களுக்குப் பக்கவாட்டில்- பதினெட்டு, இருபது வயதுகளில் இரண்டு அழகான பெண்கள்.

எல்லோருமே கலவரப்பட்டு தெரிந்தார்கள். அந்தக் குளிரிலும் நிறைய வியர்த்திருந்தார்கள். "டேய்... அஜய். யார்ரா இந்தக் கொடுமையை செஞ்சது...?"- வயதான அம்மாள், கூண்டை எட்டிப் பார்த்துவிட்டு புலம்ப - அந்த பைஜாமா இளைஞன் மோவாயைப் பிடித்துக்கொண்டு சொன்னான்.

"நாம எல்லோரும் வீட்டுக்குள்ளே இருக்கிறப்பவே... யாரோ தைரியமா வந்து இந்தக் காரியத்தை பண்ணி இருக்காங்கம்மா..."

"பாவம்... இந்தக் கிழவனை இப்படி குத்திக் கொன்னதால யாருக்கு என்ன லாபமோ...?"- அந்த இரண்டு பெண்களும் வயதான அம்மணியின் முதுகுக்குப் பின்னால் இருந்தபடி எட்டிப் பார்த்தார்கள். கண்களில் பயம் தெரிந்தது.

...ன் பக்கமாய் திரும்பிப் பார்த்து – "மானேஜர்" என்று குரல் கொடுக்க... அந்த இரண்டு இளைஞர்களில் உயரமாய் இருந்தவன் முன்னால் வந்தான். சம்மர் கிராப். அகலமான நெற்றி. மூக்குக் கண்ணாடி.

"சார்..."

"போலீசுக்கு போன் பண்ணிடுங்க..."

"போன் அவுட் ஆப் ஆர்டர் சார்..."

"சரி... காரை எடுத்துக்கிட்டு போய் நேர்ல சொல்லி– கையோடவே கூட்டிட்டு வந்திடுங்க..."

"சரி சார்..."– மானேஜர் என்றழைக்கப்பட்ட அந்த இளைஞன், காரை நோக்கி நகர்ந்தான். அவன் நகர நகரவே பவித்ரன் குறுக்கிட்டான். அழுவிடம் சொன்னான்.

"எக்ஸ்க்யூஸ்மீ சார்..."

"என்ன...?"

"நீங்க தப்பா நினைக்கலைன்னா... நானும் அவர் கூட போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் போயிட்டு வரட்டுமா...? ஏன்னா, இந்தப் பிணத்தை மொதல்ல பார்த்தவன் நான்தான்..."

"போயிட்டு வா..."

அழுவ் சொல்ல– எஸ்டேட் மானேஜரோடு சேர்ந்து நடந்தான் பவித்ரன். அவனுடைய முதுகுக்குப் பின்னால்– அந்த இரண்டு பெண்களில் ஒருத்தி கேட்டாள்.

"யாரண்ணா... இந்த ஆள்...?"

"நாம 'சூப்பர்வைசர் வேணும்'னு கொடுத்த விளம்பரத்தைப் பார்த்துட்டு, சென்னையில் இருந்து வந்திருக்கான்..."

"இந்த நேரத்திலா...?"

அந்தப் பெண்கள் ஆச்சர்யமாய் அவனைப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே – கார் வேகமாய் போர்டிகோவைவிட்டு வெளியே வந்தது. வெளிச்சத்தை வாரி இறைத்துக்கொண்டு 'காம்பவுண்டு கேட்'டைத் தாண்டியது. மானேஜர் என்று அழைக்கப்பட்ட அந்த இளைஞன், காரை வேகமாய் ஓட்டினான். மேட்டுப் பாங்கான சாலைகளிலும், சரிவுகளிலும் அநாயாசமாய் ஏறி இறங்கினான். ஒரு திருப்பத்தில் காரை வளைத்துக்கொண்டே கேட்டான்.

"உம் பேரென்ன?"

"பவித்ரன்..."

"சொந்த ஊர் சென்னையா..."

"ஆமா சார்..."

"வேலை கேட்டு பங்களாவுக்குள்ளே நுழையறப்பவே... ஒரு கொலை வழக்கோடு உள்ளே நுழைஞ்சிருக்கே..."

"ஸாரி சார்... நான் இதை எதிர் பார்க்கலை. காவலாளியோட



பொணத்தைப் பார்த்ததும் நான் ஆடிப் போயிட்டேன்..."

"நீ இந்த ஊருக்கு வர்றது இதுதான் முதல் தடவையா...?"

"ஆமா..."

"பஸ்ஸைவிட்டு எறங்கினதும் குறிஞ்சியாறு எஸ்டேட்டுக்கு யார்கிட்டயாவது வழி கேட்டியா...?"

"ஆமா..."

"கேட்டதும் என்ன சொன்னாங்க...?"

"ஒண்ணும் சொல்லலை சார்..."

"இதோ பார் பவித்ரன். இந்தப் பொய்யெல்லாம் எனக்கு வேண்டாம். இந்தச் சின்ன ஊர்ல இருக்கிற ஜனங்க யார்கிட்டே நீ கேட்டிருந்தாலும்... அவங்க உன்னைப் போகாதேன்னு பயமுறுத்தி இருப்பாங்க. நான் சொன்னது சரியா?"

"ஆமா... ஏன் சார் அப்படிச் சொல்றாங்க...?"

"நீ சொன்னா பயந்துடமாட்டியே...?"

"மாட்டேன்... சொல்லுங்க சார்..."

"அந்தப் பங்களாவில் பேய் பிசாசு நடமாட்டம் இருக்காம். உனக்கு முன்னாடி வேலைக்கு வந்த ரெண்டு சூப்பர்வைசர்களும் விபத்துகளில் செத்துட்டாங்க. அந்தச் சம்பவங்களும் பேய் பிசாசு வேலைதான்னு ஊர்ல எப்படியோ செய்தி பரவிடுச்சு..."

"இத யார் பரப்பறாங்க சார்...?"

"வேற யார்... எஸ்டேட் போட்டியாளர்கள்தான். இந்த சேதுக்கல் முடியிலேயே ... மிஸ்டர் ருத்தரய்யாவோட எஸ்டேட் தான் நல்லா இருக்கு. அதை அவர் வித்துட்டு ஓடணும்னு எதிர்பார்த்து யாரோ இந்த வேலைகளைப் பண்ணிட்டு இருக்காங்க..."

"காவலாளி செத்ததும் அப்படித்தானா சார்...?"

"நான் அப்படித்தான்னு நினைக்கிறேன்..."

சரிவுகளும், மேடுகளும் முடிந்து– சமவெளிக்கு வந்த கார், மண் சாலையில் அரை கிலோ மீட்டர் தூரம் ஓடி – அந்த போலீஸ் நிலையம் முன்னால் வந்து நின்றது.

"பவித்ரன்..."

"நான் கார்லேயே உட்கார்ந்து இருக்கேன். எனக்கும், இந்த ஸ்டேஷன் இன்ஸ்பெக்டருக்கும் தொழிலாளர்கள் பிரச்சினையில் கொஞ்சம் தகராறு. நீயே போய்ச் சொல்லி கூட்டிட்டு வா..."

பவித்ரன் தலையாட்டிக்கொண்டே கீழே இறங்கி, ஸ்டேஷனுக்குள் நுழைந்தான். ஸ்டேஷன் வெறிச்சோடி இருந்தது. துப்பாக்கிகள் அடுக்கி இருந்த இடத்தில் மட்டும் ஒரு போலீஸ்காரரின் தலை தெரிந்தது.

"கான்ஸ்டபிள்..."

"யாரது...?"

கேட்டுக்கொண்டே அவர் வெளியே வந்தார். பவித்ரனைப் பார்த்ததும், "என்ன சார்... என்ன விஷயம்...?" என்றார்.

"கொலை ஒண்ணு நடந்திருக்கு. அதைப் பத்தி தகவல் தரணும். சப்-இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் யாரும் இல்லையா...?"

"காட்ரோடு டவுன்ல ஒரு லாரியை மடக்குறதுக்காக ரெண்டு பேருமே போய் இருக்காங்க. இப்ப வந்துடுவாங்க. அப்படி அந்தப் பெஞ்சுல உட்காருங்க சார். ஆமா, கொலை எங்கே நடந்திருக்கு...?"

"குருதியாறு எஸ்டேட் பங்களாவில்..."

காவலர் சலித்துக்கொண்டார். "மாசத்துல ஏதாவது ஒரு சம்பவம் அவங்க எஸ்டேட்ல நடந்துடுது. மொத ரெண்டு வழக்கையும் விபத்துன்னு சொன்னாங்க. இதை என்ன சொல்லப் போறாங்கன்னு தெரியலை. ம்... எல்லாம் பெரிய இடத்து விவகாரம். அப்படித்தான் இருக்கும். நீங்க இப்படி உட்காருங்க சார்... பத்து நிமிஷத்துல இன்ஸ்பெக்டர் வந்துடுவார்."

"வெளியே ஒருத்தர் காத்திட்டிருக்கார். அவர்கிட்டே விபரம் சொல்லிட்டு வந்துடறேன்."

"ம்..."

பவித்ரன் வெளியே வந்தான். ஒரு சிகரெட்டை வாயில் கொடுத்து-லைட்டரால் அதன் முனையைக் குளிப்பாட்டிய எஸ்டேட் மானேஜர் நிமிர்ந்தான்.

"என்ன பவித்ரன்... சொல்லிட்டியா?"

"ஸ்டேஷன்ல இன்ஸ்பெக்டரும், சப் இன்ஸ்பெக்டரும் இல்லை சார். வெளியே போயிருக்காங்களாம். பத்து நிமிஷத்துல வந்துடுவாங்கன்னு கான்ஸ்டபிள் சொல்றார்..."

"அப்போ நீ ஒண்ணு செய்..."

"என்ன சார்?"

"நான் எஸ்டேட்டுக்குப் போறேன். நீ இங்கே இருந்து- இன்ஸ்பெக்டர் வந்ததும் விஷயத்தைச் சொல்லி ஜீப்புல கூட்டிட்டு வந்துடு..."

"சரி சார்..."

பவித்ரன் தலையாட்டியதும், கார் கிளம்பியது. காரின் பின்புற சிவப்பு விளக்குகள் மறையும் வரை பார்த்துக்கொண்டிருந்த பவித்ரன் – மறுபடியும் ஸ்டேஷனுக்குள் போனான். சுவரோரமாய் போட்டிருந்த மரப் பெஞ்சில் உட்கார்ந்தான்.

நிமிடங்கள் மெல்ல நழுவி – எட்டு மணியானபோது –

வாசலில் ஜீப் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

இன்ஸ்பெக்டரும், சப்- இன்ஸ்பெக்டரும் உள்ளே வந்தார்கள். கூடவே பேச்சு தொற்றிக்கொண்டது.



"இன்னிக்கும் லாரிக்காரன் வழியை மாத்திட்டுப் போயிட்டான் போலிருக்கு. அடுத்த தடவையாவது மடக்கணும்..."

"நான் நினைக்கிறேன் சார்... நமக்கு கிடைச்ச தகவலே தப்பா இருக்குமுன்னு. எவனோ விளையாடறான் சார்..."

"இல்லை விஜயகுமார். நமக்கு கிடைச்ச செய்தி சரியானது... ஆனா, நாம போறதை யாரோ எப்படியோ மோப்பம் பிடிச்சுடறாங்க..."

பேசிக்கொண்டே நுழைந்த இன்ஸ்பெக்டர், பெஞ்சில் உட்கார்ந்திருந்த பவித்ரனை பார்த்தபடியே தன்னுடைய நாற்காலிக்குப் போனார்.

"யாரப்பா நீ... என்ன வேணும்...?"

பவித்ரன் எழுந்து அவரருகே வந்தான். "என் பேர் பவித்ரன்... சென்னையில் இருந்து வர்றேன். குருதியாறு எஸ்டேட் பங்களாவுக்கு ஒரு வேலை விஷயமா கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி போயிருந்தபோது..." என்று ஆரம்பித்து எல்லா விஷயத்தையும் சொல்லி முடித்தான்.

"வாட்ச்மேன் செத்துக் கிடந்ததை நீதான் மொதல்ல பாத்தியா?"

"ஆமா... சார்..."

இன்ஸ்பெக்டர் இப்போது சப்- இன்ஸ்பெக்டரிடம் திரும்பினார்.

"விஜயகுமார்..."

"சார்..."

"மாசத்துக்கு ஒரு பொணமாவது அந்தப் பங்களாவில் விழணும்னு யாராவது சாபம் குடுத்திருப்பாங்க போலிருக்கு. சீக்கிரம் இங்கிருந்து மாறுதல் வாங்கிடணும்..."

"ம்...! இப்ப அங்கே போயிட்டு வந்துடலாமா சார்...?"- விஜயகுமார் கேட்டார்.

"ஒரு பத்து நிமிஷம் உட்காருங்க. மெதுவா போகலாம்..."

பவித்ரன் குறுக்கிட்டான். "சார்... நான் வந்து ரொம்ப நேரமாச்சு..."

"ஆனா என்னப்பா... நீ பொடி நடையா பங்களாவுக்கு போயிட்டிரு... நாங்க பின்னாடி வர்றோம்..."- கள்ளென்று எரிந்து விழுந்தார் இன்ஸ்பெக்டர்.

பவித்ரன் அவரையே சிறிது நேரம் பார்த்தான்.

"என்னய்யா பார்க்கிறே?"

"உங்க கடமை உணர்ச்சியை நினைச்சுப் பார்க்கிறேன்... காக்கி உடை மாட்டிகிட்டாலே இதயம் காணாம போயிடும்னு சொல்றது சரியாத்தான் இருக்கு..."

"ஏய்... என்ன உளர்றே...?"

"மிஸ்டர் இன்ஸ்பெக்டர்... இதைக் கொஞ்சம் பார்க்கறீங்களா?"- பவித்ரன் தன் பேண்ட் பாக்கெட்டில் இருந்து ஒரு நீல நிற அட்டையை

உருவி- இன்ஸ்பெக்டரிடம் நீட்ட – அவர் அதைக் குழப்பமாய் வாங்கினார். பார்த்தார்.

அடுத்த விநாடி- நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு – விருட்டென்று எழுந்தார். விரைப்பாய் 'சல்யூட்' ஒன்றை விதியோகித்தார். குரல் இறைமலாய் வெளிப்பட்டது. "சார்... சார்! நீங்க... கிரைம் பிராஞ்ச் ஆபீஸர்?"

"அதே..."- என்றான் பவித்ரன் – புன்னகையோடு.

"ஸாரி சார்...."

இப்போது சப்- இன்ஸ்பெக்டரும் விறைப்பாக நின்றார். அவசர அவசரமாய் ஒரு நாற்காலியை அவர் இழுத்துப் போட – பவித்ரன் அதில் உட்கார்ந்தான்.

## 5

பவித்ரன் மெல்லிய குரலில் சொன்னான். "எஸ்டேட்ல வேலைக்குச் சேர்ந்ததும் உங்ககிட்டே என்னை அடையாளம் காட்டிக்கலாம்னு இருந்தேன். ஆனா, அதுக்குள்ளே காட்ட வேண்டிய அவசியம் வந்துடுச்சு..."

பதற்றமாகிப் போயிருந்த இன்ஸ்பெக்டர்- தன் நெற்றி வியர்வையை கைக்குட்டையால் ஒற்றிக்கொண்டே கேட்டார். "நீங்க எந்தக் காரணத்துக்காக அந்தக் குருதியாறு எஸ்டேட் பங்களாவில் வேலைக்கு சேர வந்தீங்க சார்?"

"போன ஆகஸ்டு மாசமும், செப்டம்பர் மாசமும் வேலைக்குச் சேர்ந்த 'சூப்பர்வைஸர்'கள் ராஜசேகரன், வெங்கடேசன் மர்மமான முறையில் செத்திருக்கிறதா... சென்னை கிரைம் பிராஞ்சுக்கு- அவங்களோட உறவினர்கள் கடிதம் எழுதி இருக்காங்க. அந்த மரணங்களோட விபரங்களைப் படிச்சுப் பார்த்தேன். ரெண்டுமே விபத்துங்கிற மாதிரியான தொனி அதுலே தெரிஞ்சுது. ஆனாலும், என் மனசுல ஒரு சந்தேகம். ஏதோ ஒரு காரணத்துக்காக அவங்க ரெண்டு பேரும் பலி வாங்கப்பட்டு இருக்காங்கன்னு ஒரு நெருடல்.

இந்த வழக்கை எப்படி கையாளலாம்னு யோசிச்சிட்டு இருந்தப்பத்தான்... குருதியாறு எஸ்டேட் பங்களாவுக்கு ஒரு 'சூப்பர்வைஸர்' வேணும்னு விளம்பரம் வந்ததைப் பார்த்தேன். அந்தப் போர்வையில பங்களாவுக்குள்ளே நுழைஞ்சு பார்த்தா என்னான்னு மனசுக்கு தோணிச்சு. மேலிடத்தில் அனுமதி வாங்கிட்டு, ஒரு சூட்கேஸைத் தூக்கிக்கிட்டு உடனே புறப்பட்டு வந்தேன். இங்கே அந்தப் பங்களாவுக்கு வழி கேட்டப்போ... இந்த ஊர்



ஜனங்க பயந்து நடுங்கினதைப் பார்த்தபோது ஆச்சர்யமா இருந்தது.

ஆனா, நேர்ல பங்களாவுக்கு போனதும்- நானே அதிர்ச்சி அடையற மாதிரி ஒரு சம்பவம். வாட்ச்மேனை யாரோ கொன்னு, கண்டுல உட்கார வெச்சு எனக்கு வரவேற்பு கொடுத்திருக்காங்க. நீங்க உடனே வரணும்..."

"போலாம் சார்...! விஜயகுமார், ஜீப்பை எடுக்கச் சொல்லுங்க..."- இன்ஸ்பெக்டர் சொன்னதும், சப்-இன்ஸ்பெக்டர் வெளியேறினார்.

இன்ஸ்பெக்டரிடம் கேட்டான் பவித்ரன்.

"அந்த ருத்ரய்யா... சுபாவத்துல எப்படி?"

"ரொம்பவும் மென்மை சார்..."

"அந்த வீட்டிலே யார் யார் எப்படின்னு ஒரு விபரம் தர முடியுமா?"

"நிச்சயமா..." என்று தலையாட்டிய இன்ஸ்பெக்டர், மெல்லிய குரலில் தொடர்ந்தார்.

"அந்தக் குடும்பத்துல மொத்தம் ஏழு பேர் சார். பெரியவர் ருத்ரய்யா. அவருடைய மனைவி ஜெகதாம்பாள். மூத்த மகன் அஜய், இரண்டாவது மகன் மதன். மகள் லட்சணா. மதனோட மனைவி கோகிலா. அஜய்யோட பத்து வயதுப் பொண்ணு ஜோதி... மொத்தம் ஏழு பேர் அந்த வீட்ல இருக்காங்க சார்."

"அஜய்யோட மனைவி?"

"அந்தப் பொண்ணு பேர் லீலாவதி. மூணு மாசத்துக்கு முன்னாடி விஷக் காய்ச்சல் வந்து செத்துப் போயிடுச்சு சார்."

"என் கூட வந்த எஸ்டேட் மானேஜர் பேரென்ன?"

"தங்கராஜன்..."

"ஆள் எப்படி...?"

"ஒண்ணும் ஆழம் காண முடியலை சார். எஸ்டேட் தொழிலாளர் விஷயத்துல எனக்கும், அவனுக்கும் மோதல் வந்திருக்கு. கொஞ்சம் 'ஷார்ட்' பேர் வழி..."

"அந்த ரெண்டு 'சூப்பர்வைஸர்' மரணங்களைப் பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க?"

"விபத்து மாதிரிதான் தெரியுது சார். ஒருத்தர் 'கரண்ட் ஷாக்'ல செத்தார். இன்னொருத்தர் குளிக்கப் போய், குருதியாத்துச் சுழியிலே மாட்டிக்கிட்டார்..."

"சார் ஜீப் வந்துடுச்சி..."

வாசலில் சப்- இன்ஸ்பெக்டர் குரல் கேட்டது. பவித்ரனும்,

இன்ஸ்பெக்டரும் எழுந்தார்கள். ஜீப்பை நெருங்கி உள்ளே பரவினார்கள். விஜயகுமார் ஜீப்பைக் கையாண்டார்.

ஜீப் நகர – பவித்ரன் சொன்னான். "நீங்க ரெண்டு பேருமே அந்த எஸ்டேட் குடும்பத்துக்கு முன்னாடி அந்நியனாவே என்னை காட்டிக்கணும்ங்க. உத்தியோக மரியாதையெல்லாம் வேண்டாம்..."

"எஸ்... சார்..."

"நான் அந்தப் பங்களாவில் இருக்கிற நேரங்கள்ல... எந்தக் காரணத்தைக் கொண்டும் என்கூட போன்ல பேச முயற்சி பண்ணாதீங்க..."

ஜீப் மலைச்சரிவுகளின் இருட்டான பாதையில் குதித்து குதித்து ஓடியது. சுற்றுப்புறம் அதிகக் குளிரில் இருந்தது.

ஜீப்பை ஓட்டிய சப்- இன்ஸ்பெக்டர், திரும்பிப் பார்த்துக்கொண்டே மெல்லிய குரலில் பேசினார்.

"சார்..."

"ம்..."

"நான் சொல்றேன்னு நீங்க தப்பா நினைக்கக் கூடாது..."

"சொல்லுங்க..."

"இப்போ நீங்க ஏத்திட்டிருக்கிற வேலை ரொம்பவும் 'ரிஸ்க்'... அந்த பங்களாவில் எல்லாமே மர்மமா இருக்கு..."

"அந்த மர்மம் என்னன்னு விளங்கணும்னா யாராவது ஒருத்தர் அந்த வீட்டுக்குள்ளே போயாகணும். மிஸ்டர் விஜயகுமார்... எனக்கு வாரம், பத்து நாள் போதும். அந்த ரெண்டு 'சூப்பர்வைசர்'களோட மரணங்கள் விபத்தா... கொலையான்னு சொல்லிடுவேன். புதுசா நடந்திருக்கிற இந்த வாட்ச்மேன் மரணத்துக்கும் யார் காரணங்கிறதையும் கண்டுபிடிச்சிடலாம்..."

ஜீப் ஓடிக்கொண்டிருக்க – மூவருக்கும் மத்தியில் மவுனம் நிலவியது. சிறிது நேர யோசனைக்குப் பின் பவித்ரன் கேட்டான்.

"அந்த ருத்ரய்யாவுக்கு இந்த ஹைக்கல்முடியில எவ்வளவு எஸ்டேட் இருக்கும்?"

"ஒரேயொரு எஸ்டேட்தான் சார்..."

"சொத்து விஷயமா அவங்களுக்குள்ளே ஏதாவது தகராறு வருமா...?"

"அப்படியே சொத்து விஷயமா அவங்களுக்குள்ளே தகராறு வந்தாலும்- அந்த சூப்பர்வைசர்களும், வாட்ச்மேனும் ஏன் பலியாகணும்...?"- விஜயகுமார் கேட்டார்.

"ஒரே குழப்பமா இருக்கு. பங்களாவுக்குள்ளே ஊடுருவினாத்தான் எதுவுமே புரியும் போலிருக்கு."

ஜீப் இப்போது பங்களாவை நெருங்கிக்கொண்டிருந்தது.



"இன்ஸ்பெக்டர்... நான் சொன்னது...!"

"நல்லா ஞாபகம் இருக்கு சார்..."

## 6

பங்களா அருகே அந்தக் கும்பல் இன்னமும் நின்றிருந்தது. தரையை தேய்த்துக்கொண்டு நின்ற ஜீப்பில் இருந்து மூன்று பேரும் இறங்கினார்கள்.

கூட்டத்தில் இருந்து விலகி வந்த எஸ்டேட் மானேஜர் தங்கராஜன், இன்ஸ்பெக்டரை நெருங்கினான். "வாங்க சார்..." என்றான்.

"பாடி எங்கே இருக்கு...!"

"வாங்க... காட்றேன்."

தங்கராஜன் முன்னால் கூட்டிக்கொண்டு போய் – கூண்டருகே நிறுத்தினான். கூண்டுக்குள் எட்டிப் பார்த்த விஜயகுமார் கேட்டார்.

"பாடியை யாரும் தொடலையே...?"

"தொடலை..."

இன்ஸ்பெக்டர் குனிந்து பிணத்தைப் புரட்டி பார்த்தார். இடுப்பில் தேங்கி இருந்த ரத்தம் 'பளக்' என்று வழிந்தது.

"குத்தின கத்தி எங்கேயாவது கிடைச்சதான்னு விசாரிங்க விஜயகுமார்."

தங்கராஜன் குறுக்கிட்டு சொன்னான். "கத்தி எங்கேயும் கிடைக்கலை..."

"பாடியை மொதல்ல பார்த்தது யாரு...?"

"இவர்தான்..."

தங்கராஜன் திரும்பி பவித்ரனைக் காட்டினான். இன்ஸ்பெக்டர் அவன் பக்கமாய் போனார். "உங்க பேர் என்னான்னு சொல்லுங்க."

"பவித்ரன்..."

"பாடியை நீங்கதான் மொதல்ல பாத்தீங்களா...?"

"ஆமா..."

"அப்போ எத்தனை மணி இருக்கும்?"

"ஏழு மணி இருக்கும்..."

"உங்க சொந்த ஊர் சென்னையா...?"

"ஆமா சார்..."- பணிவாய் வந்தது பதில்.

"பாடியை நீங்க பார்த்த நேரத்துல இந்தப் பக்கமா யாராவது நடந்து

போனதையோ... நின்னுவிட்டு இருந்ததையோ பார்த்தீங்களா...?"

"இல்லை சார்..."

இன்ஸ்பெக்டர் திரும்பினார். "விஜயகுமார்..."

அவர் "சார்" என்றபடி அருகில் வர – "பாடியை மார்ச்சுவரிக்கு கொண்டு போக ஏற்பாடு பண்ணுங்க..." என்றார் இன்ஸ்பெக்டர். பிணத்தின் அருகே போனார் விஜயகுமார். இன்ஸ்பெக்டரோ வீட்டுக் கும்பல் நின்றிருந்த இடத்தை நோக்கிப் போனார்.

"மிஸ்டர் அஜய்...! எத்தனை வருஷமா அந்த வாட்ச்மேன் உங்க வீட்டு வேலை பார்க்கிறார்?"

"ஏறக்குறைய இருபது வருஷமா..."

"ஆள் எப்படி... முரடா...?"

"ஒரு வம்பு தும்புக்கும் போகாதவன்..."

"வாட்ச்மேனை இப்படி கொலை செய்யற அளவுக்கு என்ன காரணம் இருக்க முடியும்?"

"தெரியலை இன்ஸ்பெக்டர்..."

"வாட்ச்மேனுக்கு குடும்பம் இருக்கா...?"

"இல்லை... அவன் ஒண்டிக்கட்டை..."

"வேலை நேரம் போக... மத்த நேரத்துல அவன் எங்கே தங்குவான்...?"

"அவுட் ஹவுஸுக்குப் பின்னாடி ஒரு பழைய 'கார் ஷெட்' இருக்கு. அங்கேதான் தங்கிக்குவான்."

"அந்த இடத்தை நான் பார்க்கணும்..."

"வாங்க... போலாம்"– இன்ஸ்பெக்டரைக் கூட்டிக்கொண்டு போனான்.

பவித்ரன் சுற்றும் முற்றும் பார்த்தான். ருத்ரய்யாவின் மனைவி ஜெகதாம்பாளும், மகள் லட்சணாவும், மருமகள் கோகிலாவும் முகங்களில் கவலை தாங்கி நின்றிருந்தார்கள்.

தங்கராஜன், பவித்ரனிடம் வந்தான். "உன்னோட சூட்கேஸை 'அவுட் ஹவுஸ்'ல எடுத்து வெச்சிருக்கு. நீ அங்கேயே தங்கிக்க. உன்னோட வேலை விஷயமா... நாளைக்கு பேசிக்கலாம்."

"சரி சார்" என்றான் பவித்ரன்.

## 7

**தன்னை மீறின அசதியில் அயர்ந்து போய் தூங்கிக்கொண்டிருந்த பவித்ரனுக்கு, திடீரென விழிப்பு தட்டியது.** படுக்க போகும்போது எரிந்துகொண்டிருந்த 'ஜீரோ வாட்ஸ்' விளக்கு அணைந்து போயிருந்ததால் அறை முழுக்க இருட்டாய் தெரிந்தது.



போர்வையை விலக்கியபடி – கட்டிலில் இருந்து எழுந்து உட்கார்ந்து மணிக்கட்டை உயர்த்தி ரேடியம் மின்னிய கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

நேரம் சரியாய் 12.05

'விளக்கு ஏன் எரியவில்லை...?' – கட்டிலைவிட்டு இறங்கி, ஸ்விட்ச் போர்டு அருகே போனான். மெயினில் 'இண்டிகேட்டர் லைட்' அணைந்து கிடந்தது. மெல்ல நடந்து போய் அறையின் மூலையில்– மூடியிருந்த ஜன்னலைத் திறந்து அதன் வழியே பங்களாவைப் பார்த்தான்.

பங்களாவும் இருட்டில் கிடந்தது.

நிமிட நேரம் பங்களாவையே பார்த்துக்கொண்டிருந்தவன், பிறகு ஜன்னலை மூட முயன்றபோது சட்டென்று கூர்மையானான்.

சிதிலமான பங்களாவுக்குப் பின்புறம் கொட்டி இருந்த இருட்டில் ஒரு வெளிச்சப் பொட்டு லேசாய் அசைந்து அசைந்து போய்க்கொண்டிருந்தது.

'என்ன அது...?'

'மெழுகுவர்த்தியா... சிம்னி விளக்கா...?'

'இந்த நேரத்தில் அதை எடுத்துக்கொண்டு யார் எங்கே போகிறார்கள்?' – பவித்ரனின் 'கிரைம் பிராஞ்ச்' மூளை சுறுசுறுப்பானது.

வேகவேகமாய் வந்து தன் சூட்கேஸைத் திறந்து அந்த பென் டார்ச்சை எடுத்துக்கொண்டு – அவுட் ஹவுஸைவிட்டு வெளியே வந்தான். கதவை வெறுமனே சாத்திவிட்டு– டார்ச்சை உயிர்ப்பித்துக்கொண்டு வாசல்படி இறங்கினான். கண்களை உயர்த்தி–

பங்களாவின் பின்பக்கத்தைப் பார்த்ததும் அதிர்ந்தான்.

அந்த வெளிச்சப் பொட்டு காணாமல் போயிருந்தது.

சுற்றும் முற்றும் பார்த்தான். அட்டைக் கரியான இருட்டில் எதுவும் புலப்பட மறுத்தது.

'அந்த வெளிச்சம் தெரிந்த இடம் வரை சென்று பார்க்கலாமா...?'

'பார்' என்றது மனசு.

பவித்ரன் நடந்தான்.

இருட்டில் நின்றிருந்த பங்களா இப்போது பூதாகரமாய் தெரிந்தது. 'கிச் கிச்' சென்று ஒரு சில் வண்டின் சத்தம் மட்டும் இடைவிடாமல் கேட்டது.

பங்களாவின் பின்புறம், அவன் நின்றிருந்த இடத்தில் இருந்து நூறு மீட்டர் தூரத்தில் இருந்தது பெரும்பாலும் பொட்டல் வெளி.

பவித்ரன் நடந்தான். டார்ச்சின் வெளிச்ச வட்டம் இருட்டை ஒற்றி

ஒற்றி எடுத்துக்கொண்டே போக - இரண்டு நிமிடங்களுக்குப் பின்னால் பங்களாவின் பின்புறத்திற்கு வந்தான். குளிர்காற்று ஜில்லென்று அவ[ன்] மேல் விழுந்து புரண்டது.

பவித்ரன் கண்களை நாலா திசைகளிலும் சுழற்றி- அந்த வெளிச்ச[ப்] பொட்டைத் தேடினான். 'நான் வருவதைப் பார்த்ததும் வெளிச்சத்தை அணைத்துவிட்டு எங்கேயாவது ஒளிந்திருந்து பார்க்கிறார்களோ...?'

டார்ச் வெளிச்சத்தை நகர்த்திக்கொண்டே- பங்களாவின் பின்பக்கமா[க] இன்னும் போனான். வழி பூராவும் நிறைய செடிகள். முட்கள். ஜாக்கிரதையா[க] தாண்டித் தாண்டி நடந்தான். நான்கைந்து அடிகளுக்கு ஒரு தடவை நின்று தீர்க்கமாய் சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டான். மறுபடியு[ம்] நடந்தான்.

முன்னால் போய்க்கொண்டிருந்த டார்ச் வெளிச்சம் சட்டென்று அந்த[ப்] பாழடைந்த கிணற்று மேடை மீது பட்டதும், ஒரு விநாடி திடுக்கிட்டு[ப்] போனான் பவித்ரன்.

கிணற்று மேடை நிரம்பவும் தூர்ந்து போயிருந்தது. அவற்றி[ன்] மேடை ஏராளமாய் வெடித்துப் போயிருக்க- அதன் வெடிப்புகளுக்[கு] மத்தியில் எருக்கம் செடிகள் பீறிட்டு வளர்ந்திருந்தன. கிணற்றுச் சுவ[ரை] சுற்றிக்கொண்டே- அதன் அருகே வந்து- உள்ளே எட்டிப் பார்த்தான்.

கிணற்றின் வாய் இருட்டாய் தெரிய- அதற்குள் டார்ச் அடித்து[ப்] பார்த்தான். வெளிச்சம் பட்டதும் ஒரு வவ்வால் உள்ளிருந்து- குபீரென்[று] முகத்தை அறைகிற மாதிரி பறந்து வந்தது.

சரேலென பின் வாங்கி நகர்ந்தான் பவித்ரன். மனசுக்குள் ஒரு பய[ம்] குதித்தது.

முன்பின் தெரியாத இந்தப் பங்களாவின் பின்புறத்தில்- இருட்டி[ல்] இப்படி அலைவது சரியில்லை. அவுட் ஹவுஸுக்கே திரும்பிவிடலாம்...

யோசித்துக் கொண்டே- டார்ச் வெளிச்சத்தைத் திருப்பினான்.

திடுக்கிட்டான்.

இருபதடி தொலைவில் அந்த சிமெண்டு மேடை தெரிந்தது. மேடையி[ன்] மேல் ஒரு பெண் சம்மணமிட்டு உட்கார்ந்திருந்தாள்.

பவித்ரனின் இதயம் ஒரு முறை உதறிக்கொண்டது.

'யார் அது?'- உற்றுப் பார்த்தான்.

பெண்தான்!

"இந்தாம்மா... யாரது அங்கே...?"- பவித்ரன் குரல் கொடுத்தான்.

அந்தப் பெண்ணிடம் இருந்து எந்த அசைவுமில்லை.

இரண்டடி எடுத்து முன்னால் வைத்தான்.

"இந்தாம்மா... உன்னைத்தான்..."

அவள் திரும்பவே இல்லை.



இன்னும் முன்னால் போனான். அதிர்ந்தான்.

சிமெண்டு மேடையின் முகப்பில் டார்ச் வெளிச்சம் பட- சில விநாடிகள் சப்தநாடியும் அடங்கிப் போனான். வெளிச்சத்தில் சிமெண்டின் கரண்டின எழுத்துகள் மசமசவென்று தெரிந்தன.

படித்தான்.

திருமதி ஏ. லீலாவதி.

தோற்றம் : 5 – 8 – 19........ ( வருஷ எண்களில் மண் அடித்திருந்ததால் தெரியவில்லை)

மறைவு : 13 – 12 – 1985.

தேதிகளுக்கு கீழே ஒரு வாசகம் பளிச்சென்று தெரிந்தது. 'அன்பின் திருவுருவே! உன் ஆத்மா சாந்தி அடையட்டும்...'

பவித்ரனின் கையிலிருந்த டார்ச் நடுங்கியது.

"இ-- இ-- இது-- இது-- லீலாவதியின் சமாதி. அனுப் மனைவி லீலாவதியின் சமாதி..."

அவனுடைய கண்கள் பயமாய்- சமாதியின் மேல் சம்மணமிட்டு உட்கார்ந்திருந்த பெண்ணைப் பார்த்தன... 'லீலாவதியின் ஆவியோ...?'

டார்ச் வெளிச்சத்தை அந்தப் பெண்ணின் மேல் வீசி - வியர்வை வழியும் முகத்தோடு பார்த்தான்.

அந்த மாற்றம் சட்டென்று கண்களுக்கு சிக்கியது.

பெயிண்டின் பளபளப்பும்- நீட்டியிருந்த கையின் செயற்கைத் தனமும்- 'ஓ... இது சிலை...' என்கிற உண்மையை உணர்த்தின.

சமாதிக்கு அருகே வந்தான். சமாதி மேல் இருந்த அந்தப் பெண்ணின் சிலை தத்ரூபமாய் தெரிந்தது. நிஜமாகவே ஒரு பெண் சம்மணமிட்டு உட்கார்ந்த மாதிரியான தோற்றம். கண்கள் நேர் பார்வை பார்த்தன. உதட்டில் சிரிப்பு வெடிக்கப் பார்த்தது. கழுத்தில் போட்டிருந்த வாடின மாலை, வீசிய காற்றில் அசைந்தது.

'இவள்தான் லீலாவதியா...?'- சிலையைப் பார்த்துக்கொண்டே- சமாதியைச் சுற்றி வந்தான். சிலையாய் சம்மணமிட்டு உட்கார்ந்திருந்த லீலாவதி, அவனையே பார்ப்பது போன்ற பிரமையில் உடம்பு பூராவும் ஜில்லிட்டுப் போனான்.

'வேண்டாம்... இங்கே இருக்க வேண்டாம். அவுட்ஹவுஸுக்குப் போய்விடலாம்...'

யோசித்து- வேகமாய் திரும்பியவன் ஒரு குபீர் அதிர்ச்சிக்குப் போனான். பாழடைந்த அந்தக் கிணற்றுச் சுவர் மேடையில் - வெளிச்சப் பொட்டு தெரிந்தது. அடித்த காற்றைப் பற்றி கொஞ்சம்கூட கவலைப்படாமல்- நின்று நிதானமாய் எரிந்தது.

'என்ன அது...?'- இதயம் உதறிக்கொள்ள- அதை நோக்கிப் போனான்

பவித்ரன்.

வெளிச்சப் பொட்டு 'வா வா' என்றது.

கிணற்றை நெருங்கினான். மேடையில் அந்தச் சின்ன அகல் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. நிறைய எண்ணெயோடு – மெலிதான திரியோ தீவிரமாய் எரிந்தது.

'இதை யார் வைத்துவிட்டுப் போனார்கள்?'

சுற்றும் முற்றும் பார்வையைப் போட்டான். எல்லாப் பக்கமும் இருட்டு சில் வண்டின் சத்தம். வேகமாய் வீசும் குளிர்காற்று.

மவுனமாய் அகல் விளக்கையே பார்த்தான் பவித்ரன்.

திடீரென்று– அவனுக்கு பின்புறம்– யாரோ நடந்து வரும் சத்தம்.

"ஜல்... ஜல்..."

கொலுசுச் சத்தம்.

சுற்றும் முற்றும் பார்த்தான். சத்தம் எந்தப் பக்கம் இருந்து வருகிறது. பின்னாலா... முன்னாலா...? பக்கவாட்டிலா?

"ஜல்... ஜல்..."

சத்தம் அதிகப்பட்டது. அவனை நெருங்கியது.

அவ்வளவுதான்! அதுவரைக்கும் தைரியமாய் இருந்த பவித்ரன் சட்டென்று கலகலத்துப் போனான். கையிலிருந்த 'பென் டார்ச்' இரு நழுவி விழ – அவுட் ஹவுஸை நோக்கி ஓட ஆரம்பித்தான்.

கெண்டைக்காலை முட்கள் கீறியதையும் பொருட்படுத்தாமல் குற்று செடிகளை விருட் விருட்டென்று தாண்டி மூச்சிரைக்க– இருட்டில் ஓடி அவுட்ஹவுஸ் கதவு மேல் வந்து விழுந்தான்.

திரும்பிப் பார்த்தான்.

அந்த வெளிச்சப் பொட்டு மறைந்து போயிருந்தது. அவுட் ஹவுசுக்கு நுழைந்து கதவைச் சாத்திக்கொண்டான். உடம்பு பூராவும் வியர்வை ஊற்று பொங்கியது. நெஞ்சைப் பிடித்துக்கொண்டு கட்டிலில் வந் உட்கார்ந்தான்.

'காலில் கொலுசுச் சத்தத்தோடு யார் வந்தார்கள் அங்கே...?'– குழப்பமா படுக்கையில் சாய்ந்தான் பவித்ரன். வெளியே சில்வண்டின் சத்த கேட்டுக்கொண்டிருந்தது.

## 8

மறுநாள் காலை ஆறு மணி.

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு– தூக்கம் கலைந்து எழுந்தா



பவித்ரன். அவிழ்ந்திருந்த லுங்கியை சரியாய் கட்டிக்கொண்டு கதவை நோக்கிப் போனான்.

தாழ்ப்பாளை விலக்கி கதவைத் திறந்தான்.

வெளியே – எஸ்டேட் மானேஜர் தங்கராஜன் நின்றிருந்தான். அந் நேரத்துக்கே குளித்து அழகாய் தெரிந்தான்.

பவித்ரன் சொன்னான். "குட்மார்னிங் சார்."

"குட்மார்னிங்... நீ சீக்கிரம் குளிச்சுட்டு வா... பெரியவர் உன்னைப் பார்க்கணும்னு சொன்னார்."

"இதோ பத்தே நிமிஷத்துல வந்துடறேன் சார்..."

"தாமதம் பண்ணிடாதே... சீக்கிரமா வா. பெரியவருக்கு கோபம் வந்துடும்..."– அவன் சொல்லிக்கொண்டே நகர்ந்தான்.

பவித்ரன் பாத்ரூமை நோக்கிப் போனான்.

பத்தே நிமிஷம்! குளித்து முடித்து. துணி மாற்றிக்கொண்டு வெளியே வந்தான்.

பங்களாவின் பின்பக்கம் கண்ணில் பட்டது. நேற்று இரவு அதி பயங்கரமாய் காட்சி அளித்த கிணற்று மேடையும், சமாதி மேடையும் இப்போது சாதாரணமாய் தெரிந்தன. 'நேற்று ராத்திரி அப்படி பயந்து ஓடி வந்திருக்க வேண்டாம்... அந்தக் கொலுசுச் சத்தத்தோடு வந்த பெண் யார் என்பதைப் பார்த்திருக்கலாம்...'

பங்களா போர்டிகோவில் காத்திருந்த தங்கராஜன், "வா... சீக்கிரமா... வா. பெரியவர் காத்திட்டிருக்கார்..." என்று சொல்ல– அவனோடு இணைந்து உள்ளே போனான்.

"பெரியவர் ரொம்பவும் எமோஷனல் ரகம். அவர் கேட்ட கேள்விக்கு மாத்திரம் பதில் சொல்லு. அநாவசியமா பேசிட்டிருக்காதே..."

"சரி சார்..."

மாடியில் ஏறினார்கள். மரத்தாலான படிகள் 'தொம் தொம்' என்று அதிர– மாடி வராந்தாவுக்கு வந்தார்கள். வரிசையாய் நான்கைந்து அறைகள் கட்டி மரக் கதவுகளோடு வர– கடைசி அறைக்குள் நுழைந்தான் தங்கராஜன்.

தயக்கமாய் தொடர்ந்தான் பவித்ரன். வெளிப்பக்க ஜன்னலைப் பார்த்தபடி – சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்த அந்த வழுக்கைத் தலை மனிதர்– சத்தம் கேட்டு திரும்பினார். கிட்டத்தட்ட அறுபது வயதை நெருங்கிக்கொண்டிருந்த ருத்ரய்யாவுக்கு சற்று ஆஜானுபாகுவான உடம்பு. சிவந்த நிறம். அகலமான நெற்றியில் வரிவரியாய் கவலைகளை வாங்கி இருந்தார்.

அணிந்திருந்த மூக்குக் கண்ணாடியின் ஒரு பக்கம் மட்டும் 'பவர்'

தெரிந்தது. மெலிதான உதடுகளைப் பிரித்து, "வா...தம்பி..." என்று சொன்னபோது – போன மாதம் மாட்டிய புது 'பல் செட்' முத்துச்சரமாக கண்ணுக்குப் பட்டது. மெலிதான மஸ்லின் துணியில் ஜிப்பா தரித்து வேஷ்டி கட்டி இருந்தார்.

"உட்கார் தம்பி..."

"பரவாயில்லை சார்..." – பவித்ரன் உட்காராமல் மரியாதை காட்டினான்.

"பார்மாலிடியெல்லாம் காட்டாதே தம்பி... அப்படி உட்கார்... தங்கராஜ் நீங்களும் அப்படி உட்காருங்க..."

இருவரும் உட்கார்ந்தார்கள்.

ருத்ரய்யா சொன்னார். "உன்னோட பேர் பவித்ரன்னும், நீ சென்னையில இருந்து இங்கே வேலைக்கு வந்திருக்கிறதாவும் மானேஜர் சொன்னார். கடந்த ஆறு மாசமாவே இந்தப் பங்களாவோட நிலைமை சரியில்லை. திடீர் திடீர்னு என்னென்னமோ நடக்குது. எனக்கு எதுவும் புரியலை. வேலைக்கு வந்த ரெண்டு சூப்பர்வைசர்களும் ஒருத்தர் பின்னாடி ஒருத்தர் செத்துட்டாங்க. மூணாவதா பங்களா வாட்ச்மேன் நேத்தைக்கு சாயந்தரம் செத்து இன்னும் பிரச்சினையைக் கிளப்பி இருக்கான். இந்த நிலைமையில நீ இங்கு வேலை செய்ய விரும்புறியா தம்பி...?"

பவித்ரன் புன்னகைத்தான். "சார்... ஒருத்தரோட விதியை இன்னொருத்தர் மாத்திட முடியாது. என்னோட சாவைப் பத்தி நான் எண்ணிக்கூட கவலைப்பட்டதில்லை. அதுக்கு முன்னாடி வேலை பார்த்த ரெண்டு சூப்பர்வைசர்களும் விபத்துல இறந்திருக்காங்க. வாட்ச்மேனை மட்டும் யாரோ கொலை பண்ணிட்டாங்க. அதை போலீஸ் சீக்கிரமே கண்டுபிடிச்சிடப் போறாங்க..."

"அப்போ... நீ இங்கே வேலை பார்க்க ஒத்துக்கிறே...?"

"சந்தோஷமா..."

"ஊர்ல உனக்கு குடும்பம் இருக்கா...?"

"எனக்கு இன்னும் கல்யாணம் ஆகலை சார்..."

"அப்பா– அம்மா...?"

"கிராமத்துல இருக்காங்க..."

"நல்லா யோசனை பண்ணிக்க தம்பி. வேலை கிடைக்காத கொடுமைக்காக இங்கே வந்து சேராதே. சாயந்தரம் வரைக்கும் யோசனை பண்ணிப் பார்த்துட்டு உன்னோட முடிவைச் சொல்லு..."

"யோசனை பண்ண வேண்டிய அவசியமே இல்லை சார். நான் இந்த நிமிஷத்தில் இருந்து வேலைக்குச் சேர தயாரா இருக்கேன். என்னோட வேலை என்ன...? நான் எத்தனை மணிக்கு வேலைக்கு வரணும்? வேலை முடிஞ்சு எத்தனை மணிக்கு வெளியே போகலாங்கிற தகவல்களைச் சொன்னா பரவாயில்லை."



ருத்ரய்யா, மானேஜர் பக்கம் திரும்பினார். "என்ன தங்கராஜன்... நீங்க என்ன சொல்றீங்க...?"

"நான் நேத்தைக்கே பவித்ரன்கிட்டே பேசிப் பார்த்துட்டேன் சார்... ஆமா, அவரை வேலைக்கு சேர்த்துக்கலாம். அவர்கிட்ட இருக்கிற துணிச்சல் எனக்குப் பிடிச்சிருக்கு."

"சரி! கூட்டிப் போய்... வேலைக்கான உத்தரவை அவர் கையில குடுங்க. வேலையைப் பத்தி சொல்லுங்க..."

ருத்ரய்யா வாய் அசைக்கவும் – தங்கராஜன் கண்ணைக் காட்டி பவித்ரனை வெளியே கூட்டி வந்தான். வராந்தாவில் நடந்தபடியே கேட்டான்.

"சம்பளம் என்ன எதிர்பார்க்கிறே...?"

"நீங்க என்ன சொன்னாலும் சரி..."

"இதுக்கு முன்னாடி வேலை பார்த்தவங்களுக்கு பத்தாயிரம் ரூபாய்தான் குடுத்தோம்..."

"எனக்கும் அதையே குடுங்க போதும்..."

"என்ன வேலைன்னு தெரியுமா...?"

"சொல்லுங்க..."

"காலையில எட்டு மணியில இருந்து சாயந்திரம் அஞ்சு மணி வரைக்கும் எஸ்டேட் தோட்டத்துல வேலை செய்யற ஆட்களை கண்காணிக்கணும். அஞ்சு மணியானதும் கூலியைப் பட்டுவாடா பண்ணணும். தினசரி சாயந்தரம் வரவு– செலவு கணக்குகளை எழுதி வைக்கணும். அவுட் ஹவுஸ்ல தங்கிக்கலாம். மூணு நேர சாப்பாடும் பங்களாவில் இருந்து உனக்கு வந்துடும். வருஷத்துக்கு மூணு யூனிபார்ம்..."

"தேங்க்யூ சார்..."

"எஸ்டேட் தோட்டம் எங்கே இருக்குன்னு தெரியுமா...?"

"தெரியாது சார்..."

"இன்னிக்கு நான் உன்னை என்னோட பைக்கில கூட்டிட்டுப் போறேன். நாளையில இருந்து நீ மோட்டார் சைக்கிள்லதான் போகணும். அதுக்கு ஏற்பாடு பண்ணுறேன்..."

தலையாட்டினான் பவித்ரன்.

அவர்கள் போர்டிகோவுக்கு வந்தபோது–

அந்த போலீஸ் ஜீப் உள்ளே நுழைந்தது. தங்கராஜன் எரிச்சலாய் சொன்னான். "காலங்கார்த்தால' வந்துட்டாங்க... தாலியை அறுத்துடுவாங்க..."

ஜீப், போர்டிகோவில் வந்து நின்றது. இன்ஸ்பெக்டரும், சப்–இன்ஸ்பெக்டரும் கீழே இறங்கி வந்தார்கள். தங்கராஜன் ஒரு சிரிப்பை ஒட்ட வைத்துக்கொண்டு "குட்மார்னிங்" சொன்னான்.

"குட்மார்னிங் தங்கராஜன்... வெளியில எங்கேயோ புறப்பட்டுட்டீ போலிருக்கே?"– இன்ஸ்பெக்டர் கேட்டுக்கொண்டே அவர்களை நெருங்கினார்.

"பவித்ரன் இன்னிக்கு வேலையில் சேர்ந்து இருக்கார் இன்ஸ்பெக்ட அவரைக் கூட்டிக்கிட்டு எஸ்டேட் தோட்டத்துக்கு போயிட்டிருக்கேன்

சப் – இன்ஸ்பெக்டர் சொன்னார்: "பவித்ரனை ஸ்டேஷன் வரைக்கு கூட்டிட்டு போகணும்! அவரைக் கொஞ்சம் தனியா விசாரணை பண்ண வேண்டியது இருக்கு. தங்கராஜன்... அனுப்பி வைக்கறீங்களா?"

"இப்பவேவா இன்ஸ்பெக்டர்?"

"ஆமா... ஒரு மணி நேரம் போதும். திரும்பவும் கொண்டு வந் இங்கேயே விட்டுடறோம். இல்லேன்னா எஸ்டேட் கார்டன்ல கொண் வந்து விட்டுடறோம்..."

"எஸ்டேட் கார்டன்லே விடுங்க இன்ஸ்பெக்டர். நான் அங்கேதா இருப்பேன். ஒரு மணி நேரத்துல கொண்டு வந்து விட்டுடுவீங்களா...?"

"கண்டிப்பா..."

பவித்ரன், இன்ஸ்பெக்டரை ஏறிட்டான். "என்னை எதுக்காக ஸ ஸ்டேஷனுக்கு கூட்டிட்டுப் போகப் போறீங்க...?"

"வாட்ச்மேன் கொலை சம்பந்தமா உங்களை இன்னமு விசாரிக்கணும்..."

பவித்ரன் மறுவார்த்தை பேசாமல் ஜீப்பில் ஏறிக்கொள்ள– தொடர்ந் இன்ஸ்பெக்டரும், சப் – இன்ஸ்பெக்டரும் உள்ளே உட்கார்ந்தார்கள். ஜீ போர்டிகோவை ஒரு அரை வட்டம் அடித்துக்கொண்டு திரும்பி – வெளி பாய்ந்தது.

இன்ஸ்பெக்டர், பவித்ரனை ஏறிட்டார். "ஸாரி சார்... காலைய உங்களுக்கு தொந்தரவு தர்றோம்..."

"என்ன விஷயம்...?"

"சென்னை கிரைம் பிராஞ்சில் இருந்து உங்களைக் கேட்டு போ வந்தது. சார், இந்த வழக்கைப் பத்தி ஏதோ பேசணுமாம்..."

"யார் போன் பண்ணினாங்க...?"

"கோகுல்நாத்."

"என்ன விஷயம்னு கேட்டீங்களா?"

"அவர் உங்ககிட்டதான் பேசணும். ஒரு மணி நேரம் கழிச்சு மறுபடி போன்ல வர்றதா சொன்னார். அதான் உங்களைக் கூட்டிட்டுப் போ வந்தோம்."

"தேங்க்யூ..."

ஜீப் ஸ்டேஷனை நோக்கி ஓடியது.

"நேற்று ராத்திரி அந்தப் பங்களாவில் உங்களுக்கு ஏதாவது வித்தியாச



பட்டதா சார்...?"– இன்ஸ்பெக்டர் கேட்டார்.

பவித்ரனுக்கு திடீரென்று நேற்றைய சம்பவங்கள் கும்பலாய் ஞாபகத்துக்கு வந்தது. ஸ்டேஷன் போய் சேருவதற்குள் எல்லாவற்றையும் சொல்லி முடித்தார்.

இன்ஸ்பெக்டர் கேட்டார். "அந்த அலறலுக்கும், ஜல்ஜல் சமாச்சாரமும் லாஜிக்கலா உதைக்குது சார். அது அந்த லீலாவதி ஆவியா ஏன் இருக்கக் கூடாது...?"

பவித்ரன் சிரித்தான். "ஆவியா... ஆவி இருக்குன்னு நீங்க நம்புறீங்களா?"

"எனக்கு லேசா நம்பிக்கை உண்டு சார்..."

"ஆவிங்கிறதெல்லாம் சுத்த பேத்தலான விஷயம் இன்ஸ்பெக்டர். நேத்தைக்கு ராத்திரி நான் பயந்ததென்னவோ வாஸ்தவம்தான். ஆனா, இன்னிக்கு பயப்படமாட்டேன்."

ஜீப்பைவிட்டு இறங்கி ஸ்டேஷனுக்குள் நுழைந்தார்கள். உரையாடித்துக் குடித்து பேசிக்கொண்டு இருக்கும் போதே – சென்னை போன் வந்தது.

பவித்ரன் பேசினான். "குட்மார்னிங்..."

சென்னையில் இருந்து கிணற்றுக் குரலில் பதிலுக்கு– "குட்மார்னிங்" சொன்னார் கோகுல்நாத். "போன காரியம் என்னாச்சு... சூப்பர்வைசர் வேலையில ஒட்டிக்கிட்டீங்களா...?"– தொடர்ந்து கேட்டார்.

"ம்... ஒட்டிக்கிட்டேன்..."

"நீங்க 'மூவ்' பண்ணுற வழக்குல மூணாவதா வாட்ச்மேன் கொலையும் சேர்ந்துடுச்சு போலிருக்கே..."

"எதிர்பார்க்காத சம்பவம்..."

"ஏதாவது தகவல்?"

"நாளைக்கு காலையில போன் பண்ணுறேன்... இதே நேரத்துக்கு பிராஞ்ச்ல இருங்க கோகுல்நாத்..."

"ஓ.கே."

இரண்டு பக்கமும் ரிஸீவர்களை கவிழ்த்தார்கள்.

"அவ்வளவுதானா பேச்சு...?"– இன்ஸ்பெக்டர் கேட்டார்.


பவித்ரன் சிரித்தான். "நான் வேலையில சேர்ந்துட்டேனா... இல்லையான்னு உறுதிபடுத்தத்தான் போன் பண்ணி இருக்கார் கோகுல்நாத்."

"உங்களை எஸ்டேட் தோட்டத்துல விட்டுட்டுமா சார்...?"

"தோட்டம் இங்கிருந்து ரொம்ப தூரமா...?"

"பக்கந்தான்..."

பவித்ரன் எழுந்தான். "போலாம்... நாளைக்கு காலையில மறுபடியும்





விசாரணைங்கிற போல ஸ்டேஷனுக்கு வர்றேன் இன்ஸ்பெக்டர்..."

ஜீப்புக்கு வந்தார்கள்.

"விஜயகுமார்..."– இன்ஸ்பெக்டர் கூப்பிட்டார்.

"சார்..."

"நீங்க... எஸ்டேட் தோட்டத்துல இவரை 'டிராப்' பண்ணிட்டு அப்படியே ஆஸ்பத்திரிக்குப் போய் – வாட்ச்மேனோட போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் எப்போ கிடைக்குமனு டாக்டர்கிட்டே கேட்டுடுங்க..."

"எஸ்... சார்..."

"நாளைக்கு காலையில மறுபடியும் பார்க்கலாம் சார்..."

விஜயகுமாரும், பவித்ரனும் ஜீப்புக்குள் போனார்கள். அடுத்த நிமிடத்தின் ஆரம்பத்தில் ஜீப் புறப்பட்டது.

மேட்டிலும், சரிவிலும் சரியாய் பத்து நிமிட பயணம்.

பச்சைப் பசேலென்று எஸ்டேட் தோட்டம் வந்தது.

## 9

அது ஒரு சிறிய மலைச்சரிவு. தேயிலைப் பாத்திகள் பச்சை நிற வெல்வெட் மெத்தைகள் போல் தோட்டத்தின் கிழக்குப் பக்கத்தை ஆக்கிரமித்திருக்க – மேட்டுப் பக்கம் பூராவும் முட்டைகோஸும், பீட்ரூட்டும் பயிராகி சிரித்தன. சோப்பு நுரை போன்ற மேகங்கள் கைக்கு எட்டும் தூரத்தில் நின்று நின்று நகர்ந்தன.

அந்த ரம்மியமான சூழ்நிலையில் சில விநாடிகள் தன்னை இழந்து போன பவித்ரன், ஜீப்பில் இருந்து கீழே இறங்கவும் மறந்தான்.

"சார்..."– விஜயகுமார் உசுப்பினான்.

"ம்..."

"இதான் ருத்ரய்யாவின் எஸ்டேட் கார்டன். ஏறக்குறைய ஐம்பது ஏக்கருக்கு மேல் பரவிக் கிடக்குது. டீ, காப்பி, காய்கறி எல்லாமே அமோக விளைச்சல்..."

"அற்புதமான இடம்..."– சொல்லிக்கொண்டே கீழே இறங்கினான் பவித்ரன். பெரிய ஐஸ் கட்டியின் மேல் பட்டு வந்த மாதிரி காற்று அவனுடைய முகத்தையும், பிடரியையும் தடவியது. தோட்டத்துக்கு மத்தியில் நிறைய ஆண்களும், பெண்களும் கூலி வேலை செய்துகொண்டிருக்க – அவர்களுக்கு நடுவே தங்கராஜன் தெரிந்தான். போலீஸ் ஜீப்பைப் பார்த்ததும் மேலேறி வந்தான்.

ஜீப் புறப்பட்டுப் போக- தங்கராஜனை நெருங்கினான் பவித்ரன்.

"ஸாரி சார்... கொஞ்சம் நேரமாயிடுச்சு..."

"உன்னை எதுக்காக கூட்டிட்டுப் போனாங்க...?"

"வாட்ச்மேன் கொலை விஷயமா விசாரிச்சாங்க."

"என்னான்னு விசாரிச்சாங்க...?"

"நீ இந்த ஊருக்கு இதுக்கு முன்னாடி வந்திருக்கியான்னு திரும்பத் திரும்ப கேட்டாங்க. பகல்ல வேலை கேட்டு வராம, ராத்திரி நேரத்துல ஏன் வந்தேன்னு கேட்டாங்க. ஆட்டைக் கடிச்சு - மாட்டைக் கடிச்சு... அப்புறம் மனுஷனையே கடிச்ச கதை மாதிரி... போலீஸ் அங்கே இங்கே பார்த்து- அப்புறம் என் மேலேயே சந்தேகப்பட ஆரம்பிச்சுட்டாங்க சார்..."

"அவங்க கேட்ட கேள்விக்கெல்லாம் நீ என்ன பதிலைச் சொன்னே பவித்ரன்?"- தங்கராஜன் ஆர்வமாய் கேட்டான்.

"நான் இந்த ஊருக்கு வர்றது இதுதான் முதல் தடவை. இங்கே எனக்கு யாரையும் தெரியாதுன்னு அடிச்சு சொல்லிட்டேன்."

"பங்களாவில இருக்கிற ஆட்களைப் பத்தி ஒண்ணும் கேட்கலையா?"

"கேட்டாங்க..."

"என்னைப் பத்தி...?"

"கேட்டாங்க..."

"என்ன கேட்டாங்க...?"

"நீங்க வேலைக்கு வந்து சேர்ந்து எத்தனை வருஷமாச்சுன்னு கேட்டாங்க."

"நீ என்ன சொன்னே...?"

"எனக்கு அந்தப் பங்களாவில் இருக்கிற யாரையும் தெரியாது. இனிமேல்தான் ஒவ்வொருத்தரைப் பத்தியும் தெரிஞ்சுக்கணும்னு சொன்னேன்..."

"சரி... வா. 'கார்டன் ஷெட்'டுக்கு போலாம்..." என்று சொன்ன தங்கராஜன்- சரிவுகளில் கூலி வேலை செய்துகொண்டிருந்த ஆண்களையும், பெண்களையும் நோக்கி கைகளைத் தட்டினான்.

"எல்லோருமா இப்படி வாங்க..."

செய்துகொண்டிருந்த வேலைகளை விட்டுவிட்டு - கும்பல் கும்பலாய் கூலிப் பட்டாளம் மேடேறி வந்து- அவர்களைச் சூழ்ந்து நின்றது. தங்கராஜன் உரத்த குரலில் சொன்னான்.

"இன்னிக்கு வேலைக்கு சேர்ந்திருக்கிற புது சூப்பர்வைஸர் இவர்தான். சென்னையில் இருந்து வந்திருக்கார். யாரும் எந்த விதமான அடாவடி தனமும் பண்ணாம... இவர்கிட்டே ஒழுங்கா நடக்கணும். இன்னிக்கு கூலி இவர்தான் தருவார்..."

எல்லோரும் தலை ஆட்டினார்கள்.



"போங்க... போய் வேலையைப் பாருங்க..."- தங்கராஜனின் வெண்கலக் குரலில் எல்லோரும் கலைந்தார்கள். பவித்ரன் அவனை ஏறிட்டான்.

"இங்கே மொத்தம் எத்தனை பேர் சார் வேலை பார்க்கிறாங்க...?"

"நூத்தி இருபத்தி மூணு பேர். அதுல எழுபது பேர் பெண்கள். நீ பெண்கள் விஷயத்துல எப்படின்னு எனக்குத் தெரியாது. சபலப்பட்டு எவளையாவது தொட்டுட்டியானா... செருப்பு மாதிரி கட்டுடுவாங்க. காசில்லாத ஏழை ஜனங்கதானேன்னு எளப்பமா நினைச்சுடாதே. தனக்கு மேலே இருக்கிறவன்னும் பார்க்காமே செமத்தியா மொத்திடுவாங்க."

"நான் அப்பேர்ப்பட்ட ஆளில்லை சார்."

"போகப் போகத்தான் தெரியும்..."

தோட்டத்துக்கு மத்தியில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்ந்த அந்தச் சின்ன கொட்டகைக்கு வந்தார்கள். உள்ளே நுழைந்து அழுக்கான மேசை முன்னாடி உட்கார்ந்து - 'கூலி பட்டுவாடா நோட்டு' என்று கோணல் மாணலாய் எழுதப்பட்டிருந்த அந்த நீளமான நோட்டை கையில் எடுத்துக்கொண்டான். அதன் பக்கங்களைப் புரட்டி புரட்டி - கூலி எப்படித் தர வேண்டும் என்பதை சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தான்.

## 10

பவித்ரன் எஸ்டேட் தோட்டத்தில் வேலையை முடித்து- கூலியாட்களுக்கு பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டு பங்களா 'அவுட் ஹவுஸு'க்கு திரும்பிய போது நேரம் மாலை- 6.45.

இருட்டு வேகமாய் கவிந்தது. பங்களாவின் போர்டிகோவில் ஜெகதாம்பாளும், மகள் லட்சணாவும் மானேஜர் தங்கராஜனோடு பேசியபடி நின்றிருந்தார்கள். பவித்ரனைப் பார்த்ததும் ஜெகதாம்பாள் கையசைத்துக் கூப்பிட்டாள்.

"இங்கே கொஞ்சம் வாப்பா..."

அவனை நோக்கிப் போனான்.

"வணக்கம்மா..."

"எப்படி... உனக்கு வேலை பிடிச்சிருக்கா?"

"பிடிச்சிருக்கம்மா..."

அழகாய் குள்ளமாய் அம்மா சாயலில் இருந்த லட்சணா குறுக்கிட்டு கேட்டாள். "நீ என்ன படிச்சிருக்கே!"

"பி.எஸ்ஸி..."

"மெயின் பாடம் என்ன?"

"பாட்டனி..."

"இந்தத் தோட்ட வேலைக்கு ஏத்த பாடம்தான். ஆமா... மத்தியானம் குடுத்து அனுப்பின சாப்பாடு வந்ததா...?"

"வந்ததும்மா..."

"சரி, போய் குளியலை முடிச்சுட்டு வா. ஒண்ணா உட்கார்ந்து சாப்பிடலாம்..."– ஜெகதாம்பாள் சொல்லவும், தலையாட்டிவிட்டு – அவுட்ஹவுஸை நோக்கி நடந்தான் பவித்ரன்.

அவுட்ஹவுஸ் மசமசப்பான இருட்டிலும் – பனியிலும் புதைந்து கிடந்தது. வாசல்படி ஏறி– வெறுமனே சாத்தி இருந்த வாசல் கதவைத் தள்ளினான்.

கதவு 'கிரீச்'சென்று உள்ளே போனது...

வீட்டினுள் கொட்டியிருந்த இருட்டில் – மெதுவாய் நடந்து போய் சுவிட்சைத் தொட்டான். விளக்கு உயிர் பிடித்து எரிந்தது. பேண்ட்டையும், சட்டையையும் கழற்றி கட்டில் மேல் எறிந்தான்.

மேசை மேல் இருந்த அந்தப் பொருள்– அவனை ஆச்சர்யப்பட வைத்தது.

டார்ச்.

நேற்றைக்கு ராத்திரி அவன் பங்களாவின் பின்பக்க கிணற்று மேடைக்கு அருகே கைநழுவ விட்ட டார்ச்.

'இதை யார் கொண்டு வந்து வைத்திருப்பார்கள்?'

மனசுக்குள் திகில் ஒரு ஊசி மாதிரிப் பாய்ந்தது.

டார்ச்சை கையிலெடுத்துப் பார்த்தான்.

அதே விநாடி–

அவனுக்கு பின்பக்கமாய் யாரோ மூச்சு விடும் சத்தம் பாம்பின் சீறல் மாதிரி கேட்டது.

திரும்பினான்.

**மா**டியறை.

டைனிங் டேபிளைச் சுற்றி எல்லோரும் பரவி இருந்தார்கள். மோவாயை கழுவிக்கொண்டு ருத்ரய்யா– பேத்தி ஜோதியோடு பேசியபடி ஜெகதாம்பாள். ஏதோ ஒரு 'க்ரைம்' நாவலைப் படித்தபடி லட்சணா. கணவன் மதனோடு சிரித்தபடி கோகிலா. காலையில் படிக்காமல்விட்ட பத்திரிகையைப் புரட்டியபடி அஜய். யார் கூடவும் ஒட்டாமல் தங்கராஜன். அவனுக்குப் பக்கத்தில் பவித்ரனுக்காக காத்திருக்கும் நாற்காலி.

மதன், தங்கராஜனை ஏறிட்டான்.

"தங்கராஜன்... அந்தப் புது ஆள் குளிச்சுட்டு வர்றதுக்கு இவ்வளவு நேரமா?" நான் மத்தியானமும் சரியா சாப்பிடலை. போய் சீக்கிரமா வரச் சொல்லு..."– தங்கராஜன் கையில் இருந்த கடிகாரத்தைப் பார்த்தான். மணி 7.10.

"பவித்ரன் குளிச்சிட்டு வர இவ்வளவு நேரமா...?"

நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு எழுந்தான். முகத்தில் கோபம் அடிக்க, வேக வேகமாய் அறையைவிட்டு வெளியேறி – மாடிப் படிகளில் தடதடத்து ஹாலுக்கு வந்தான்.

'வேலைக்கு சேர்ந்த முதல் நாளே இப்படியா! எல்லோரும் காத்திருப்பார்கள் என்கிற பொறுப்புணர்ச்சி கொஞ்சமாவது வேண்டாமா?'– மனசுக்குள் பவித்ரனை நிறுத்தி கோபமாய் திட்டிக்கொண்டே – அவுட்ஹவுஸை நெருங்கினான். வாசற்படி ஏறி கதவைத் தட்டினான்.

"டொக்... டொக்..."

அமைதி.

"பவித்ரன்"– தங்கராஜன் குரலின் தொனியை உயர்த்திக் கத்தினான். உள்ளே கனமான மவுனம்.

'என்ன இவன்... உள்ளே தூங்கிட்டானா?'– யோசித்துக்கொண்டே, கதவின் மேல் கையை வைத்து– முழு வேகத்தோடு தள்ளினான்.

"கிரீச்" என்ற அலறலோடு உள்ளே போனது கதவு.

சதுரமாய் இருட்டு தெரிந்தது.

"பவித்ரன்."

பேச்சில்லை. மூச்சில்லை. தங்கராஜன் உள்ளே மெல்ல காலடி எடுத்து வைத்தான். சுவரில் இருந்த சுவிட்ச் போர்டில் கையை வைத்து தடவி சுவிட்சைப் போட்டான்.

விளக்கு பளீரென்றது.

பார்வையை உள்ளே வீசினான் தங்கராஜன்.

அடுத்த விநாடி– அதிர்ந்தான். முதுகுத்தண்டின் பாதையில் ஒரு ஐஸ் கட்டி ஊர்ந்தது.

அறையின் மையத்தில் – கால்களையும், கைகளையும் பரப்பியபடி குப்புற விழுந்து கிடந்தான் பவித்ரன். தலை வலது பக்கமாய் திரும்பி இருந்தது. கண்கள் எதிர்ச் சுவரை வெறிக்க –

அவனைச் சுற்றிலும் ரத்தம் ஓவியம் வரைந்திருந்தது. அதிர்ந்து போன தங்கராஜன், மெதுவாய் நடை போட்டு பவித்ரனை நெருங்கி உட்கார்ந்தான். உடம்பை மெல்லப் புரட்டினான்.

சலனமில்லாமல் மல்லாந்தான் பவித்ரன்.

இடுப்பில் – அரையடி நீளத்துக்கு–

அந்த ரத்தக் காயத்தின் கிழிசல் தெரிந்தது.

# 11

மறுநாள் காலை பத்து மணி.

வேஷக்கல்முடியில் வந்து நின்ற பஸ்ஸில் இருந்து இன்ஸ்பெக்டர் கோகுல்நாத்தும், விவேக்கும் இறங்கினார்கள். வேஷக்கல்முடிக்கு மேல் நின்றிருந்த மேகங்கள் மழை பெய்வதற்கான ஆயத்த நிலையில் இருந்தன காற்றில் நிறைய குளிர்.

சப்– இன்ஸ்பெக்டர் விஜயகுமார், ஜீப்போடு காத்திருந்து அவர்கள் வந்ததும் 'சல்யூட்' பதித்தார்.

விவேக் ஜீப்பில் ஏறிக்கொண்டே கேட்டான். "பவித்ரனோட போஸ்மார்ட்டம் முடிஞ்சுட்டதா விஜயகுமார்...?"

"முடிஞ்சது சார்... பாடியை உங்க பார்வைக்காகத்தான் வெச்சிருக்கோம்". ஜீப்பை கிளப்பியபடி விஜயகுமார் சொன்னார்.

"மரணம் எப்படி... கத்தியா... துப்பாக்கியா...?"

"கத்திதான்..."

"வாட்ச்மேனோட மரணம் மாதிரி இதுவும்?"

"ஆமா... சார்..."

"எஸ்டேட் வீட்ல இருக்கிறவங்களை விசாரிச்சீங்களா...?"

"இன்ஸ்பெக்டர் விசாரிச்சார் சார்..."

"ஏதாவது தடயம்...?"

"ஒண்ணும் கிடைக்கலை சார்..."

"தொடர்ந்த மாதிரியான இந்தக் கொலைகளைப் பத்தி அந்த வீட்ல இருக்கிறவங்க என்ன சொல்றாங்க?"

"எல்லாருமே பிரமிச்சு போயிருக்காங்க சார். அது எப்படி... எதுக்காகன்னு யாராலும் சொல்ல முடியலை. மொதல்ல ஸ்டேஷனுக்கு போவோமா... ஆஸ்பிடலுக்கு போவாமா சார்?"– விஜயகுமார் ஒரு சாலை வளைவு அருகே ஜீப்பின் வேகத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டே கேட்டார்.

"மொதல்ல ஆஸ்பிடலுக்குப் போய் பவித்ரனோட பாடியைப் பார்த்துட்டு நேரா எஸ்டேட் பங்களாவுக்கு போயிடுவோம்..."

"எஸ் சார்..."

ஜீப், ஆஸ்பத்திரி நோக்கி ஓடியது.

கோகுல்நாத் கேட்டார். "ருத்ரய்யாவுக்கு இந்த ஊரில் எதிரிகள் யாராவது இருக்காங்களா?"

"விசாரிக்கப் பார்த்த அளவில இல்லை சார்..."

"நல்லா விசாரிக்கணும் மிஸ்டர் விஜயகுமார். சொந்த ஊர்ல விரோதிகள்



ராணி முத்து
சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |
| **வெளிநாடுகள்** | |
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:
மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை-600 007.

நிச்சயமா இருப்பாங்க. ருத்ரய்யாவை அந்தப் பங்களாவில் இருந்து கிளப்பறதுக்காக யாராவது இப்படிப் பண்ணிட்டு இருக்கலாம்..."

விவேக் குறுக்கிட்டுக் கேட்டான். "ருத்ரய்யாவுக்கு மொத்தம் எத்தனை மகன்கள் இருக்காங்க?"

"ரெண்டு பேர் சார்..."

"பேரென்ன?"

"மூத்தவன் அஜய். ரெண்டாவது பையன் மதன்."

"ருத்ரய்யாவுக்கு கால் ஊனம்னு கேள்விப்பட்டேன். அந்த ஊனம் எப்படி ஏற்பட்டதுன்னு விசாரிச்சீங்களா...?"

"விசாரிச்சோம் சார்."

"என்ன சொன்னாங்க...?

"ரெண்டு வருஷங்களுக்கு முன்னாடி அவருக்கு பக்கவாதம் வந்ததாகவும் – அதுல வலது கால் நடக்க முடியாதபடி செயலிழந்து போனதாகவும் சொன்னாங்க..."

"அது விஷயமா அவங்க குடும்ப டாக்டரைக் 'கன்சல்ட்' பண்ணுனீங்களா மிஸ்டர் விஜயகுமார்...?"

லேசாய் திடுக்கிட்டார் விஜயகுமார். "பண்ணலை சார்."

விவேக் புன்னகைத்தான். "பண்ணி இருக்கணும். அவராலே சுயமா எழுந்து நிக்க முடியுமா... நடக்க முடியுமான்னு கேட்டுத் தெரிஞ்சிருக்கணும்..."

"நீங்க அவர் மேலே சந்தேகப்படுறீங்களா சார்?"

"நான் சந்தேகத்துக்காக சொல்லலை விஜயகுமார். அந்த வீட்ல இருக்கிற ஒவ்வொருத்தரைப் பத்தியும் முழுசுமா உங்களுக்குத் தெரிஞ்சிருக்கணும்னு சொல்ல வந்தேன். மூத்த மகனோட பேர் என்னான்னு சொன்னீங்க..."

"அஜய்..."

"அந்த அஜய்யோட மனைவி மூணு மாசத்துக்கு முன்னாடி இறந்துட்டதா கேள்விப்பட்டேன்..."

"ஆமா சார்..."

"அஜய்யோட மனைவி எதனால இறந்தான்னு விசாரிச்சீங்களா?"

"விசாரிச்சோம் சார்."

"என்ன சொன்னாங்க...?"

"ராத்திரி பூரா அடிச்ச விஷக் காய்ச்சல்ல செத்துப் போனதா சொன்னாங்க. ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர்கூட துக்கம் விசாரிக்க போயிட்டு வந்தாங்க சார்..."

"அஜயோட மனைவி பேர் என்ன?"

"தெரியலை சார்..."

விவேக் தன் சட்டைப் பாக்கெட்டில் இருந்து அந்தச் சின்ன டைரியை உருவினான். ஒரு பக்கத்தை பிரித்து வைத்துக்கொண்டு சொன்னான்.

"அஜயோட மனைவி பேர் லீலாவதி. எஸ்டேட் தோட்டத்துல வேலை செஞ்சிட்டிருந்த மாரப்பன் என்கிற மேஸ்திரியோட பொண்ணு. பொள்ளாச்சியில படிச்ச லீலாவதி ஆரம்பத்துல கொஞ்சம் மிரண்டு போனாலும் – போகப் போக அஜய் குடுத்த தைரியத்தால் அவளும் அவனைக் காதலிக்க ஆரம்பிச்சா.

கல்யாணம் பண்ணியே ஆகணும்கிற கட்டாயம் வந்தபோது ருத்ரய்யா வீட்ல எதிர்ப்பு. ஆனா, அந்த எதிர்ப்புகளையும் மீறி லீலாவதியைக் கல்யாணம் பண்ணிகிட்டான் அஜய். ஆரம்பத்துல அவளை மருமகளா ஏத்துக்க மாட்டோம்னு சொன்ன ருத்ரய்யாவும், அவரோட மனைவி ஜெகதாம்பாளும்– லீலாவதிக்கு ஒரு குழந்தை பிறந்ததுமே மனசு மாறிட்டாங்க. கடந்த பத்து வருஷ காலமா அந்த வீட்ல அவ குடும்பம் நடத்தி இருக்கா..."

"லீலாவதியோட மரணத்துல நீங்க சந்தேகப்படுறீங்களா... சார்...?"

"லேசா..."

"அது இயற்கையான மரணம் சார்..."

"அப்படீன்னு நீங்க சொல்றீங்க... ஓகே! இப்போ நான் கேக்கிற ஒரு கேள்விக்கு பதில் சொல்லுங்க. அந்த லீலாவதியை எங்கே புதைச்சாங்க...?"

"அவங்க பங்களாவுக்கு பின்புறம்..."

"ஏன்...?"

"குடும்ப வழக்கப்படி – அவங்க வீட்ல யார் செத்தாலும்... வாழ்ந்த இடத்திலேயே புதைக்கிறதுதான் பழக்கமாம்..."

விவேக் ஏதோ பேச வாயெடுத்த நேரம்– ஜீப் அந்த ஆஸ்பத்திரி முன்னால் போய் நின்றது. விவேக் இறங்கிக்கொண்டே விஜயகுமாரிடம் சொன்னான்.

"இந்த வழக்குல நிறைய இடத்துல சந்தேகம் வருது விஜயகுமார். வழக்கமா ஒரு வழக்கில் நாலைஞ்சு முனைகள் வரும். அதுல ஏதாவது ஒண்ணுல கொலையாளியை அமுக்கிடலாம். ஆனா, இந்த வழக்கைப் பொறுத்தவரைக்கும் நான் சென்னையில் இருந்து விசாரிச்ச அளவில



நிறைய சந்தேகம்."

ஆஸ்பத்திரி வராந்தாவில் மூன்று பேரும் நடந்து– பிரேத பரிசோதனை அறைக்கு வந்தார்கள். விவேக்கையும் கோகுல்நாத்தையும் பார்த்ததும் 'சல்யூட்' ஒன்றை விநியோகித்தார்– வாசலில் காத்திருந்த இன்ஸ்பெக்டர்.

"வாங்க சார்... உள்ளே"– கூட்டிக்கொண்டு போனார்.

நீளமான தகர மேசையின் மேல் – வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்ட பவித்ரன்– நறுமண வாசனையோடு கண்ணுக்கு தெரிந்தான். பிரேத பரிசோதனை முடிந்ததுக்கு அறிகுறியாய் – பவித்ரனின் மண்டையில் 'பாண்டேஜ்' கட்டு ஒன்று தெரிந்தது.

பவித்ரனின் உடலைப் பார்த்து ஒரு நிமிஷம் கண் கலங்கினான் விவேக். பவித்ரன் சென்னையைவிட்டு புறப்பட்டு கேஷ்கல்முடிக்கு வரும்போது அவனிடம் சொன்ன வாசகம் மனசுக்குள் சுழன்றது.

'விவேக்...! எண்ணி ஒரே வாரம்... அந்த கேஷ்கல்முடி வழக்கை கேஷ் பண்ணி கொலையாளியோட... முடியைப் பிடிச்ச இழுத்துட்டு சென்னை வர்றேனா... இல்லையா பார்...'– விவேக் ஆச்சர்யப்பட்டான்.

"பவித்ரன் எப்பவுமே ஜாக்கிரதையான பேர் வழி... அவன் எப்படி ஏமாந்தான்?"

"அவுட்ஹவுஸ்ல வெச்சே கொலை நடந்திருக்கு சார்..." – இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டுச் சொன்னார்.

"பிணத்தை மொதல்ல பார்த்தது யாரு...?"

"எஸ்டேட் மானேஜர் தங்கராஜன்..."

"பவித்ரனோட கொலை நடந்த நேரம்... அந்தப் பங்களாவில் எல்லாரும் இருந்தாங்களா?"

"இருந்தாங்க சார்..."

"டாக்டர் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் குடுத்துட்டாரா...?"

"குடுத்துட்டார் சார்"– என்று சொல்லியபடியே தன் கையில் சுருட்டி வைத்திருந்த காகிதங்களை விவேக்கிடம் நீட்டினார் இன்ஸ்பெக்டர்.

அதை வாங்கிப் புரட்டினான் விவேக். அது மரணம் நேர்ந்த வரலாற்றை மருத்துவ வார்த்தையோடு விவரித்தது. "கல்லீரலுக்கும், கணையத்துக்கும் இடையே பாய்ந்த கத்தியானது– ஆழமான ஐந்து அங்குல காயத்தை ஏற்படுத்தி– பெருமளவு ரத்தம் வெளியேறியதில் மரணம். கழுத்து நெரிபடவில்லை... உணவில் விஷமில்லை... – என்று விஸ்தாரமாய் சொல்லிக்கொண்டு போயிற்று.

"கொலை நடந்த அந்த அவுட்ஹவுஸைப் போய் பார்க்கலாமா?"

"எஸ் சார்..."

கிளம்பினார்கள்.

# 12

அவுட் ஹவுஸை சுற்றிப் பார்த்துவிட்டு – பங்களாவின் பின்பக்கமாய் நடந்து போனான் விவேக். கூடவே கோகுல்நாத், ஷேக்கல்முடி ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர், சப்- இன்ஸ்பெக்டர் விஜயகுமார், அஜய், மதன், எஸ்டேட் மானேஜர் தங்கராஜன் தொடர்ந்தார்கள்.

லீலாவதியின் சமாதி அருகே வந்ததும் – நின்றான் விவேக். தனக்குப் பக்கத்தில் நின்றிருந்த அஜய்யை ஏறிட்டான்.

"இது உங்க மனைவியோட சமாதி இல்லையா மிஸ்டர் அஜய்...?"

"ஆமா சார்..."

"ஏன் வீட்டுக்குப் பின்னாடியே அடக்கம் பண்ணி இருக்கீங்க...?"

"எங்க குடும்ப வழக்கம்."

"உங்க மனைவி எப்படி இறந்தாங்க...?"

"விஷக் காய்ச்சல்..."

"ரொம்ப நாளா படுக்கையில படுத்திருந்தாங்களா...?"

"இல்லே! ஒரு நாள்தான்..."

"சமாதி மேல எதுக்காக உங்க மனைவியோட சிலை...?"

"ஒரு ஞாபகார்த்தத்துக்குத்தான்..."

"ராத்திரி பவித்ரன் அவுட்ஹவுஸ்ல தங்கியிருந்த நேரத்துல சமாதிப் பக்கமா யாரோ ஒரு பொண்ணு கொலுசு சத்தத்தோட நடந்து போனதாகவும், கையில ஒரு அகல்விளக்கு இருந்ததாகவும்... இன்ஸ்பெக்டர்கிட்ட பவித்ரன் சொல்லி இருக்கார். இதைப் பத்தி உங்களுக்கு ஏதாவது தெரியுமா...?"

"தெரியாது சார்..."

"எப்படித் தெரியாதுன்னு சொல்றீங்க? உங்க வீட்ல நடக்கிறது உங்களுக்குத் தெரியாதா...?"– விவேக் ஒரு கூர்மையான பார்வையோடு அஜய்யைப் பார்த்துக்கொண்டே கேட்டான்.

"நான் இதுவரைக்கும் அது மாதிரி பார்த்ததில்லை சார்..."

"உங்க வீட்ல அந்த மாதிரியான சம்பவத்தை வேற யாராவது பார்த்திருக்காங்களா?"

"அப்படிப் பார்த்திருந்தா என்கிட்டே சொல்லி இருப்பாங்க சார்..."

சமாதியையும், இணைந்து மேடையையும் சுற்றிப் பார்த்துவிட்டு– பங்களாவுக்குள் நுழைந்தான் விவேக். வரவேற்பறையிலேயே லட்சணாவும், கோகிலாவும்– ஒரே சோபாவில் கவலையோடு மோவாய்களை தாங்கிக்கொண்டு உட்கார்ந்திருக்க– கொஞ்சம் தள்ளி இருந்த நாற்காலியில் ஜெகதாம்பாள்– பேத்தி ஜோதியோடு தெரிந்தாள். விவேக்கும்,



கோகுல்நாத்தும் உள்ளே நுழைந்ததும் அவர்கள் எழுந்தார்கள்.

ஜெகதாம்பாளை நெருங்கினான் விவேக். மெல்லிய குரலில் கேட்டான். "உங்க வீட்ல நடக்கிற தொடர் கொலைகளுக்கு என்ன காரணம் இருக்க முடியும்னு நினைக்கிறீங்கம்மா...?"

ஜெகதாம்பாள் குரல் தழுதழுத்தாள். "எங்களுக்கு வேண்டாதவங்க யாரோ இப்படியெல்லாம் செய்யறாங்கன்னு நினைக்கிறேன்..."

விவேக் புன்னகைத்தான். "உங்களுக்கு வேண்டாதவங்களா இருந்தா உங்க குடும்ப ஆட்களுக்குத்தானே அவங்க குறி வைக்கணும். ஆனா, இதுவரை கொலையான நாலு பேரும் வெளியாட்கள்தானே...?"

மதன் குறுக்கிட்டான். "சார்... மொதல்ல செத்துப் போன ரெண்டு சூப்பர்வைசர்களும் கொலையானவங்க கிடையாது. ஒருத்தர் கரண்ட்ல மாட்டி செத்தார். இன்னொருத்தர் ஆத்துல குளிக்கப் போனப்ப இறந்தார்..."

"அப்படீன்னு நீங்க சொல்றீங்க..."

"அதை நீங்க நம்பலையா சார்...?"

"நம்பணும்னு தோணலை..."– என்று சொன்ன விவேக், மறுபடியும் ஜெகதாம்பாள் பக்கமாய் திரும்பினான்.

"நடந்தா சலங்கை சத்தம் வர்ற மாதிரியான கொலுசை உங்க வீட்ல யார் போட்டிருக்காங்கன்னு சொல்ல முடியுமா?"

ஜெகதாம்பாள் சில விநாடிகள் தன்னுடைய பார்வையை மகன், மருமகள் மீது போட்டுவிட்டு பிறகு சொன்னாள்.

"யாருமே அந்த மாதிரியான கொலுசைப் போடலை. ஆனா, மூணு மாசத்துக்கு முன்னாடி செத்துப் போன லீலாவதி– தான் உயிரோட இருந்த கடைசி நிமிஷம் வரைக்கும் கால்ல போட்டிட்டிருந்தா..."

விவேக் திடுக்கிட்டான். "அப்போ ராத்திரி நேரங்கள்ல சமாதி பக்கமா கேக்கிற சலங்கை சத்தம் லீலாவதியோடதுன்னு சொல்ல வர்றீங்களா...?"

"இருக்கலாம்... மனசுல நிறைய ஆசைகளை வெச்சிக்கிட்டு செத்துப்போன லீலாவதியோட ஆத்மா அவ்வளவு சீக்கிரமா சாந்தி அடைஞ்சிருக்காதுன்னுதான் நினைக்கிறேன்."

"நீங்க அந்தச் சத்தத்தைக் கேட்டிருக்கீங்களா...?"

"ஒரு தடவை கேட்டிருக்கேன்."

"எப்போ...?"

"ஒரு மாசத்துக்கு முன்னாடி ஒரு ராத்திரி."

"நீங்க எந்திரிச்சுப் போய் பார்க்கலையா...?"

"பார்க்கலை... பயமா இருந்தது."

"அந்தச் சலங்கை சத்தம் கேட்டதை யார்கிட்டேயாவது சொன்னீங்களா...!"

"யார்கிட்டேயும் சொல்லலை."

"ஏன்...?"

"பயந்துகிட்டு ராத்திரியில யாரும் தூங்க மாட்டாங்கன்னு நினைச்சு சொல்லலை. அந்த ஒரு நாளைக்கு அப்புறம் நான் அந்தச் சலங்கை சத்தத்தைக் கேட்கலை."

ஜெகதாம்பாளின் இடுப்பைக் கட்டிக்கொண்டு மிரள மிரளப் பார்த்தபடி நின்றிருந்த ஜோதியின் கன்னத்தைத் தட்டினான்.

"பாப்பா... உன் பேர் என்னம்மா?"

"ஜோதி..."

"எத்தனையாவது படிக்கிறே...?"

"நாலாவது."

அஜய் குறுக்கிட்டான். "ஸார்... ஜோதி ரொம்பவும் உணர்ச்சிவசமான ரகம். அவளோட அம்மாவைப் பத்தி நீங்க ஏதாவது கேட்டா அழுதுடுவா. அப்புறம் அழுகையை நிறுத்த முடியாது. அவளோட தொந்தரவு பொறுக்க முடியாமல்தான் சமாதி மேல் சிலையை வைக்க ஏற்பாடு பண்ணினேன். நீங்க அவகிட்டே ஒண்ணும் கேக்காதீங்க. ப்ளீஸ்..."

அஜய் சொன்னதை அலட்சியப்படுத்திவிட்டு, ஜோதியிடம் குனிந்து மெல்லிய குரலில் கேட்டான் விவேக்.

"ஏம் பாப்பா... அம்மான்னா உனக்கு ரொம்பவும் பிடிக்குமா...?"

"ம்..." பெரியதாய் தலையாட்டினாள் ஜோதி.

"அவுட்ஹவுஸ்ல ஒரு மாமா செத்தாரே... எப்படி செத்துப் போனாரு...?"

"தெரியலை..."

"அவுட் ஹவுஸுக்குள்ளே அந்த மாமாவைத் தவிர வேற யாராவது உள்ளே போனதையோ... வெளியே வந்ததையோ நீ பார்த்தியா பாப்பா...?"

ஜோதி பதில் சொல்வதற்குள் – அஜய் மறுபடியும் குறுக்கிட்டான். "சார்... ஜோதி ரொம்பவும் பயந்த சுபாவம். அவகிட்ட போய் கொலை சம்பந்தமான விவகாரம் எதையும் கேக்காதீங்க..."

விவேக் புன்னகைத்தான். "ஜோதியைப் பார்த்தா அப்படித் தெரியலை. மிஸ்டர் அஜய், பெரியவங்க மறைக்கிற சில விஷயங்களைக் குழந்தைங்க சொல்லிடும். அதனால்தான் ஜோதியை விசாரிச்சுட்டிருக்கேன். நீ சொல்லு பாப்பா... அவுட் ஹவுஸுக்குள்ளே இருந்து – யாராவது வெளியே வந்தாங்களா...?"



"நான் பார்க்கலை..."

விவேக் மறுபடியும் ஜோதியின் கன்னத்தைத் தட்டிவிட்டு – திரும்பினான். "கோகுல்நாத்! மிஸ்டர் ருத்ரய்யாவைப் பார்த்து நாம் பேசி வெச்சிருக்கிற ஏற்பாட்டை சொல்லிட்டுப் போயிடலாமா...?"

"ம்... வாங்க விவேக்."

ருத்ரய்யாவைப் பார்ப்பதற்காக மேல் மாடிக்குப் போனார்கள். மாடியில்– சால்வையைப் போர்த்திக்கொண்டு– சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்த ருத்ரய்யாவை நெருங்கினான் விவேக். "உங்களுக்கு தொந்தரவு தர்றதுக்காக மன்னிக்கணும்..."

"வாங்க" என்ற ருத்ரய்யா கனமான குரலில் சொன்னார். "இந்த பங்களாவுல நடக்கிற அநாவசியமான கொலைகள் எதுக்காகன்னு எனக்குப் புரியவே இல்லை. நீங்க சென்னையில் இருந்து வந்திருக்கிற கிரைம் பிராஞ்சுன்னு சொன்னாங்க. இந்த விபரீதத்துக்கு நீங்கதான் ஒரு முற்றுப்புள்ளி வைக்கணும்..."

விவேக் புன்னகைத்தான். "முற்றுப்புள்ளி வெச்சுடலாம் சார். அதுக்கு நீங்களும் உதவணும்..."

"சொல்லுங்க... உங்களுக்கு என்ன மாதிரியான உதவி வேணும்?"

கோகுல்நாத் சொன்னார். "இதே பங்களாவில் நானும், மிஸ்டர் விவேக்கும் பத்து, பதினைஞ்சு நாள் தங்கி– இங்கே இருக்கிற சில மர்மங்களை அவிழ்க்கப் போறோம்..."

ருத்ரய்யாவின் முகம் லேசாய் மாறியது. "இதே பங்களாவில் தங்கப் போறீங்களா?"

"ஆமா..."

"நல்லா யோசனை பண்ணிக்கிங்க இன்ஸ்பெக்டர். ஏற்கெனவே அங்கே தங்கி இருந்தவங்களுக்கு என்ன கதி வந்ததுன்னு எல்லார்க்குமே தெரியும்..."

"காக்கி சீருடையை மாட்டும்போதே... என்னோட உயிர் எனக்கு சொந்தமில்லைன்னு நினைக்கிறவன் நான். மிஸ்டர் விவேக்கைப் பத்தி உங்களுக்குத் தெரியாது. இந்த வழக்கு முடியும்போது அவரைப் பத்தி நீங்க தெரிஞ்சுக்குவீங்க..."

ருத்ரய்யா சொன்னார். "நீங்க தாராளமாக இந்தப் பங்களாவில் எங்கே வேணும்னாலும் சுத்தி வரலாம். உங்களுக்குப் பிரியமான அறையை எடுத்துகிட்டு தங்கலாம். என்ன உதவி வேணும்னாலும் செஞ்சு தர நான் தயாரா இருக்கேன். என்னோட குடும்பத்தாரும் உங்களுக்கு பக்கபலமா இருப்பாங்க."

"தேங்க்யூ... வெரிமச்..."

கோகுல்நாத் சொல்ல- சுந்தரம்பாளிடம் கேட்டான் விவேக். "செத்துப் போன உங்க மூத்த மருமகள் லீலாவதி, தான் உயிரோடு இருந்த காலம் வரைக்கும் கால்ல சலங்கை கட்டின கொலுசைப் போட்டு இருந்தாங்களாமே... உண்மையா...?"

"ஆமா..."

"அந்தச் சலங்கைக் கொலுசை நான் இப்போ பார்க்கணும்..."

"எதுக்கு...?"

"ப்ளீஸ்... கேள்வி கேக்காதீங்க. பார்க்கணும். அதை யாராவது எடுத்துட்டு வர முடியுமா?"

சுந்தரம்மா திரும்பினார். "ஜெகதா! லீலாவதியோட சலங்கை கொலுசு பீரோவில்தானே இருக்கு...?"

"ஆமாங்க..."

"கூட்டிட்டு போய் காட்டு..."

"வாங்க இன்ஸ்பெக்டர்..." ஜெகதாம்பாள்- இன்ஸ்பெக்டர் கோகுல்நாத்தையும், விவேக்கையும் மாடியின் உள் பக்கமாய் இருந்த அறையை நோக்கி கூட்டிப் போனாள்.

இருவரும் நடந்தார்கள். ஒரு நிமிட நடைக்குப் பின் அந்த ஈட்டி மர பீரோ வந்தது. இடுப்பில் இருந்த சாவிக் கொத்தை உருவினாள் ஜெகதாம்பாள். வெள்ளி மணிகள் ஊசலாடிய அந்தச் சாவிக் கொத்தில் ஒன்றை எடுத்து பீரோவைத் திறந்தாள்.

இரண்டாவது தட்டில் இருந்த சிறிய அறைக்குள் கையை நுழைத்து துழாவினவள் முகம் மாறினாள். நெற்றியில் லேசாய்- பிசுபிசுப்பாய் வியர்த்துப் போய்த் திரும்பினாள்.

"இ-இ- இன்ஸ்பெக்டர்..."

"என்னம்மா....?"

"அந்தக் கொலுசை இந்த இடத்துலதான் வெச்சிருந்தேன். இப்போ காணோம்..."

## 13

மூன்று நாட்கள் மவுனமாய் – எந்த விதமான விபரீதமும் இல்லாமல் நகர்ந்திருந்தது. விவேக்கும், கோகுல்நாத்தும் பகல் நேரங்களில் சொற்ப நேரம் தூங்கி- ராத்திரி நேரங்களில் எஸ்டேட் பங்களாவை அங்குலம் அங்குலமாய் வளைய வந்தார்கள். பங்களா நிசப்தம் காத்தது. எதுவும் பிடிபட மறுத்தது.



நான்காவது நாள் விடியற்காலை நான்கு மணி.

அவுட் ஹவுஸுக்கு முன்னால் இருந்த வாசல் திட்டில் நாற்காலிகளைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த கோகுல்நாத்தும், விவேக்கும் பீறிட்டு வந்த கொட்டாவிகளை அடக்கிக்கொண்டு ஒருத்தரை ஒருத்தர் பார்த்தார்கள்.

"என்ன விவேக்...? நாம இந்தப் பங்களாவில் கண் கொத்திப் பாம்புகளா உட்கார்ந்துகிட்டு இருக்கிறதுனால கொலையாளி உஷார் ஆகிட்டான் போலிருக்கு. நம்ம திட்டத்தை மாத்தி அமைக்கணும்..."

"என்ன செய்யலாம் கோகுல்நாத்... நீங்களே சொல்லுங்க..."

"நாம ரெண்டு பேருமே சென்னை போறதா பாவ்லா காட்டிட்டு, இதே ஊர்ல இருந்து இந்தப் பங்களாவை கவனிச்சா என்ன...?"

"கொலையாளி அவ்வளவு சுலபமா ஏமாந்துடுவான்னு நான் நினைக்கலை. இன்னும் ரெண்டு நாள் பார்ப்போம்... கொலையாளி எப்படியும் தன்னோட காலை எடுத்து வெளியே வைப்பான்..."

"அந்த அகல் விளக்கு சமாச்சாரம், சமாதி பக்கத்துல சலங்கை சத்தம் இதெல்லாம் அந்த ராத்திரியில பார்த்ததாகவும், கேட்டதாகவும் நம்ம துறையைச் சேர்ந்த பவித்ரன் சொல்லி இருக்கார். ஆனா, நாம இருந்த அந்த மூணு நாட்கள்ல சமாதி பக்கமா எதுவுமே தட்டுப்படலையே...?"

கோகுல்நாத் கேட்ட கேள்விக்கு – ஏதோ பதில் சொல்ல வாயெடுத்த விவேக்கின் பார்வை பட்டென்று கூர்மையாயிற்று.

"கோகுல்நாத்..."

"என்ன விவேக்...?"

"பங்களாவுக்குள்ளே விளக்கு வெளிச்சம் தெரியுது..."

"யாராவது எந்திரிச்சு கழிவறைக்கு போவாங்க..."

"ஹால்லேயும் வெளிச்சம் தெரியுது..."

கோகுல்நாத் திரும்பிப் பார்த்தார். ஹாலின் ஆறு ஜன்னல்களும் வெளிச்ச சதுரங்களாய் தெரிந்தன. அவற்றின் மத்தியில் இரண்டு பேரின் நிழல் உருவங்கள் அசைந்தன.

'இந்நேரத்துக்கு யார்...?'

"யாருன்னு போய் பார்க்கலாமா கோகுல்நாத்?"- விவேக் வேகமாய் எழுந்து போர்டிகோவை நோக்கிப் போக- கோகுல்நாத் தொடர்ந்தார்.

இரண்டு பேரும் இருட்டில் நடந்து போர்டிகோவைத் தொட்ட நேரம்- மேற்கூரையில் ஒளிந்திருந்த டியூப்லைட்டின் இரண்டடி உடம்பு பக்கென்று ஒளிர்ந்தது.

அதைத் தொடர்ந்து- வாசல் கதவு திறக்கப்படும் சத்தம். விவேக் ஏறிட்டான்.

புத்தம் புது ஷபாரி சூட்டில் மதன் வெளிப்பட்டான். அவனுடைய தோளை ஒட்டியபடியே கோகிலா– பட்டுச் சேலையிலும், தலை நிறைய பூப்பாரத்தோடும் தெரிந்தாள். மதன் புன்னகைத்தான். சொன்னான்.

"குட்மார்னிங் மிஸ்டர் விவேக் அண்ட் மிஸ்டர் இன்ஸ்பெக்டர்..."

"குட்மார்னிங்..."

"எங்கே புறப்பட்டீங்க...?"

"கோயம்புத்தூர்ல ஒரு கல்யாணம். நெருங்கின சொந்தம். நமக்கு எவ்வளவோ இக்கட்டுகள், அசவுகரியங்கள் இருந்தாலும்... போக வேண்டிய விசேஷங்களுக்கு போய்த்தானே சார் ஆகணும். நாங்க வெளியே போறதுக்கு 'பர்மிஷன்' உண்டா...?"

"யார்– யார் போறீங்க...?"

"நான், என்னோட மனைவி, அப்புறம் ஜோதி..."– மதன் சொல்லச் சொல்லவே– ஜோதி பட்டுப் பாவாடையோடும், குஞ்சம் வைத்துக் கட்டப்பட்ட பின்னல் ஜடையோடும் ஓடி வந்தாள்.

"சித்தப்பா... நான் ரெடி..."– கீச்சலாய் கத்தினாள்.

"போலாமா...?"

"ம்..."

போர்டிகோ படிகளில் இறங்கினார்கள்.

"ஒரு நிமிஷம் மிஸ்டர் மதன்..."– சொல்லிக்கொண்டே விவேக் குறுக்கே வந்தான்.

"நீங்க போயிட்டு எப்போ வருவீங்க?"

"எப்படியும் ராத்திரி ஆகிடும்..."

"ராத்திரின்னா எத்தனை மணிக்கு...?"

"எட்டு மணிக்கு..."

"ஸாரி மதன். நீங்க சாயந்தரம் ஆறு மணிக்குள்ளே பங்களாவுக்குத் திரும்பிடணும். அப்படி திரும்ப முடியும்னு உங்களுக்கு நம்பிக்கை இருந்தா மட்டும் கல்யாணத்துக்கு புறப்பட்டுப் போங்க..."

"ஏன் அப்படிச் சொல்றீங்க மிஸ்டர் விவேக்...?"

"உங்க குடும்பத்துல எல்லாருமே... எங்க போலீஸ் கண்காணிப்புல இருக்கணும். நீங்க கல்யாணத்துக்கு போகணும்னு சொன்னதனால தான் உங்களை இப்போ வெளியே விடறேன். போயிட்டு நீங்க ஆறு மணிக்குள்ளே திரும்பிடணும்."

மதன் திரும்பி, மனைவி கோகிலாவைப் பார்த்தான்.

"என்ன கோகிலா!... சாயந்தரம் ஆறு மணிக்குள்ளே வர முடியுமா...?"

"வந்துடலாங்க... மத்தியானம் சாப்பிட்டதுமே புறப்பட்டு வந்தரலாம்.



சாயந்தரம் வரவேற்புக்கு இருக்கச் சொல்லுவாங்க. பிரச்சினையைச் சொல்லிட்டு வந்துடலாம்..."

விவேக் பக்கம் திரும்பினான் மதன்.

"ஓ.கே. மிஸ்டர் விவேக். ஆறு மணிக்குள்ளே வந்துடறோம்"– மதன் சொல்லிக்கொண்டே போர்டிகோவில் நின்றிருந்த காருக்குள் போனான்.

அவனைத் தொடர்ந்து ஜோதி– "சித்தப்பா... நான் உன் பக்கத்துலதான் உட்காருவேன்..." என்றபடி உள்ளே நுழைந்தாள். பின் இருக்கையில் கோகிலா பரவிக் கொண்டு கதவைச் சாத்தினாள். வாசல் கதவருகே நின்றிருந்த ஜெகதாம்பாளிடம்– "போயிட்டு வர்றேன் அத்தை" என்று சொல்லிக்கொள்ள – கார் கிளம்பியது.

கார் 'கேட்'டைத் தாண்டும் வரை காத்திருந்த விவேக்– ஜெகதாம்பாளை ஏறிட்டான். கேட்டான்.

"கல்யாணம் யாருக்கு...?"

கோகிலாவோட பெரியப்பா மகளுக்கு..."

"நேத்து ராத்திரி வரைக்கும் கல்யாணத்துக்கு போறதைப் பத்தி நீங்க ஒண்ணும் சொல்லலையே?"

"போக வேண்டாம்னு சொல்லிட்டிருந்தேன்... ஆனா அவங்க கேக்கலை..."

"சரி... கதவைத் தாழ்ப்பாள் போட்டுட்டுப் போய்ப் படுங்க..."

கோகுல்நாத் சொன்னதும், ஜெகதாம்பாள் உள்ளே போக முற்பட்டாள்.

"ஒரு நிமிஷம் நில்லுங்கம்மா..."– விவேக் நிறுத்தினான். அவள் நின்றாள்.

"இப்படி கொஞ்சம் வெளிச்சத்துக்கு வந்து நில்லுங்க..."

"ஏன்...?"

"சொன்னா வந்து நில்லுங்கம்மா..."

தூக்கக் கலக்கத்தோடும், எரிச்சலோடும்– வெளிச்சம் தன் மீது படும்படியாக வந்து நின்றாள் ஜெகதாம்பாள்.

விவேக் அவளை நெருங்கி தோள்பட்டை பக்கமாய் கை காட்டினான்.

"என்னம்மா இது?"

"எது?" என்றபடி தன் தோள்பட்டையைப் பார்த்த ஜெகதாம்பாளின் முதுகுத் தண்டில் ஒரு குளிர் ஓடியது. இதயம் சில விநாடிகளுக்கு அலம்பல் பண்ணியது.

தோள்பட்டை ஜாக்கெட் பரப்பில் உள்ளங்கை அளவுக்கு நீளமாய் ஒரு

ரத்தத் திற்றல். உறைந்து போய் கெட்டியாய் ஒட்டிக்கொண்ட ரத்தம்.

"இ... இ... இது...?" - ஜெகதாம்பாள் அந்தக் குளிரிலும் முகம் வியர்த்துப் போய்- கண்கள் பயத்தில் மிரள- விவேக்கைப் பார்த்தாள்.

"இது... ரத்தம்... எங்கேயாவது அடிகிடி பட்டுட்டீங்களா...?"

"இ... இல்லையே...?"

"பின்னே எப்படி...?"

"தெரியலையே...!"

"நீங்க எந்த இடத்துல படுத்திருந்தீங்க... வாங்க போய் பார்க்கலாம். என்னமோ நடந்திருக்கு... உங்களுக்கு காயம் ஏற்பட்டு வழிஞ்ச ரத்தமா இது இருக்காது. அப்படி இருந்திருந்தா காயத்தோட வலி தெரிஞ்சிருக்கும்..."

ஜெகதாம்பாள் தன் தோள்பட்டை ரத்தத்தை- தலையைச் சாய்த்து - சாய்த்து பக்கவாட்டில் பார்த்துக்கொண்டே மிரட்சியோடு உள்ளே போக- விவேக்கும், கோகுல்நாத்தும் அவளைத் தொடர்ந்தார்கள்.

மிதமான வெளிச்சத்தில் நனைந்திருந்த ஹாலை வேக வேகமாய் கடந்து- மாடிப் படிகளில் ஏறி தன் அறைக்குள் நுழைந்தாள்.

உள்ளே- தூங்கிக்கொண்டிருந்த ருத்ரய்யாவின் குறட்டைச் சத்தத்தை செவிமடுத்துக்கொண்டே விவேக்கும், கோகுல்நாத்தும் அவளைத் தொடர்ந்து நுழைந்தார்கள்.

சுவிட்சைத் தட்டினாள் ஜெகதாம்பாள். வெளிச்சத்தில்- தான் படுத்திருந்த கட்டிலைக் காட்டினாள்.

வாயிலும், மூக்கிலும் விதவிதமாய் மூச்சிரைத்து மல்லாந்து தூங்கிக்கொண்டிருந்த ருத்ரய்யாவைப் பார்த்தபடி - ஜெகதாம்பாளின் கட்டிலை நெருங்கினான்.

வெள்ளை விரிப்புக் கட்டில் சுத்தமாய் இருந்தது.

'எப்படி இந்த ரத்தம் வந்திருக்க முடியும்...?'

"கோகுல்நாத்..."

"என்ன விவேக்...?"

"ருத்ரய்யாவோட கட்டில் பக்கமா போய்ப் பாருங்க... ஏதாவது ரத்தத் தடயம் தெரியுதான்னு..."

போய் பார்த்துவிட்டு வந்தார் கோகுல்நாத்.

"சுத்தமா இருக்கு விவேக்..."

ஜெகதாம்பாளை ஏறிட்டான் விவேக். "ராத்திரியிலே எப்பவாவது... எதுக்காகவாவது எந்திரிச்சீங்களாம்மா...?"

"இல்லையே..."

"பின்னே எப்படி இந்த ரத்தத் திற்றல்?"- மோவாயைத் தேய்த்தபடி - தீவிரமாய் யோசித்தபடி- தலையைத் திருப்பிய விவேக்கின் பார்வை சட்டென்று கூர்மையாயிற்று.



அறைக் கதவருகே இருந்த- மொஸைக் தரையில்-

சிவப்பாய் ஒரு சொட்டு ரத்தம்.

விவேக் வேகமாய் போய் அந்த ரத்தச் சொட்டை குனிந்து பார்த்தான். குங்குமப் பொட்டு மாதிரி பதிந்திருந்தது. அவன் அதைப் பார்த்துக்கொண்டு இருக்கும்போதே- கோகுல்நாத் உற்சாகமாய்- மாடி வராந்தா சுவரோரமாய் தெரிந்திருந்த இன்னொரு ரத்தத் துளியை சுட்டிக் காட்டினார்.

"இன்னொரு ரத்தத் துளி விவேக்..."

"அதை அப்படியே 'பாலோ' பண்ணுங்க கோகுல்நாத். வராந்தா ஸ்விட்ச் பூராவையும் போட்டுக்குங்க..."

கோகுல்நாத் மாடி வராந்தா முழுவதையும் வெளிச்சத்திற்கு கொண்டுவந்தார். இருவரும் வராந்தா பரப்புக்கு வந்து- நிதானமாய் அடியொற்றி நடந்தார்கள்.

சுவரோரமாய் இன்னொரு ரத்தச் சிதறல்- சின்னதாய்.

ஒரு பத்தடி. மறுபடியும் ஒரு ரத்தப் பொட்டு.

மாடி வராந்தா சரேலென கோபித்துக்கொண்டு வலப்பக்கமாய் திரும்ப- அந்த அறை எதிர்ப்பட்டது.

"இது யாரோட பெட்ரூம்...?" - விவேக் திரும்பி நின்று தனக்குப் பின்னால் கலவரமாய் வந்துகொண்டிருந்த ஜெகதாம்பாளிடம் கேட்டான்.

"என்னோட மகள் லட்சணாவோடது..."

"கதவைத் தட்டி அந்தப் பொண்ணை எழுப்புங்க..."

ஜெகதாம்பாள் கதவருகே போனாள். தாழ்ப்பாளை 'டொக்' என்று தட்டினாள்.

"அம்மா... லட்சணா."

உள்ளே மவுனம்.

"லட்சணா..."

ஜெகதாம்பாள் கத்தின கத்தலுக்கு பதில் இல்லை. விவேக் இப்போது அருகே வந்தான். வலது கை முஷ்டியைக் குவித்துக்கொண்டு 'தட் தட்' என்று தட்டினான்.

அரை நிமிடம் கழித்து-

உள்ளே இருந்த கட்டில் கிரீச்சிடும் சத்தம் கேட்டது. கூடவே ஒரு மெல்லிய குரல்.

"யாரது...?"

"கொஞ்சம் கதவைத் திறங்க மிஸ் லட்சணா."

உள்ளே போட்ட சுவிட்ச் சத்தத்தைத் தொடர்ந்து - வெண்டிலேட்டர் வழியே வெளிச்சம் அடித்தது. கதவு திறக்க-

இரவு உடையில் நிரம்பி இருந்த லட்சணா, தன்னுடைய பின்னங்கழுத்தை வருடிக்கொண்டே தூக்கக் கலக்கமாய்- வெளியே நின்றிருந்தவர்களை

ஏறிட்டான். ஜெகதாம்பாளிடம் கேட்டான்.

"என்னம்மா... என்ன விஷயம்?"

ஜெகதாம்பாள் நடுங்கும் கைகளோடு மகளைத் தடவிப் பார்த்தாள்.

"உனக்கொண்ணும் ஆபத்தில்லையே லட்சணா...?"

லட்சணா குழப்பமாய் பார்க்க- ஜெகதாம்பாளின் தோள்பட்டையில் இருந்த ரத்தத் தீற்றலை சுட்டிக் காட்டியபடி விபரத்தைச் சொன்னான் விவேக்.

லட்சணாவின் முகம் வெளிறியது.

கோகுல்நாத் விவேக்கின் தோளைத் தொட்டார்... "விவேக்...! அஜய் அறை அந்தக் கடைசியிலே இருக்கு. அதையும் பார்த்துடலாம்..."

"வாங்க..."

நடந்தார்கள். வராந்தாவில் இருபது அடி நடந்ததும், ஒரு ரத்தப் பொட்டு குறுக்கிட்டது. திடுக்கிட்டுப் போய் பின் தொடர்ந்தார்கள். ரத்தப் பொட்டுகள் வழி காட்டிக்கொண்டே போயிற்று.

அடுத்த நிமிஷ ஆரம்பம்- அஜயின் அறைக்கு முன்பாக நின்றிருந்தார்கள்.

விவேக், கதவின் மேல் கையை வைக்க – அது உள்ளே போயிற்று. இருட்டு கூப்பிட்டது.

"கோகுல்நாத்..."

"என்ன விவேக்...?"

"கதவு திறந்தே இருக்கு. விபரீதம் இங்கிருந்துதான் ஆரம்பமாகி இருக்கணும். ரூம் சுவிட்ச் எங்கே இருக்குன்னு தேடிப் பாருங்க..."

தேடிப் பார்த்து சுவிட்சைத் தட்டினார் கோகுல்நாத்.

அறை குபீரென்ற ஒரு வெளிச்சத்துக்கு வர- படுக்கையில் குப்புறக் கிடந்த அஜய் தெரிந்தான். நடுமுதுகில் ஒரு கத்தி தீர்க்கமாய் புதைந்திருக்க - ரத்தம் எட்டுக் கால் பூச்சியாய்- கோடு கோடாய் முதுகுப் பரப்பு பூராவும் வழிந்திருந்தது.

கட்டிலில் இருந்து- அறையின் கதவு வரைக்கும் ரத்தத் துளிகள்- தாறுமாறாய்- சிதறி இருக்க- நின்று போன விழிகளில் எங்கோ பார்த்தான் அஜய்.

திடீரென்று- பின்னால் காலடிச் சத்தம் கேட்டு, திரும்பிப் பார்த்தான் விவேக். ஜெகதாம்பாளும், லட்சணாவும் உள்ளே வந்தார்கள். அவர்கள் வியர்த்திருந்தார்கள்.

"அஜய்க்கு ஒண்ணும் ஆபத்தில்லையே...?"– என்று கேட்டுக்கொண்டே வந்த ஜெகதாம்பாள், கட்டிலில் கிடந்த அஜயைப் பார்த்ததும் –

வீறிட்டு- கண்கள் நிலைகுத்த- பின்வாங்கி சுவரில் முட்டிக்கொண்டு நின்றாள்.



## 14

காலை ஆறுமணி.

ஷெக்கல்முடியின் தலையை சூரியனின் கதிர்கள் தொட்ட விநாடி- அறையில் இருந்து அஜய் பிணம் வெளியே கொண்டு வரப்பட்டு- பிரேத பரிசோதனைக்கு வேனில் போய்க்கொண்டு இருந்தது.

பிரேத வேனுக்கு பின்னாடியே- காரில் விவேக்கும், கோகுல்நாத்தும்- லட்சணாவும், ஜெகதாம்பாளும் புறப்பட்டார்கள். லட்சணா அழுதுகொண்டே காரை ஓட்டினாள். விவேக் லேசாய் முகம் இருண்டிருந்தான். கோகுல்நாத் யோசனையாய் நகத்தைக் கடித்துத் துப்பினார். ஜெகதாம்பாள், விவேக்கைக் கூப்பிட்டாள், தொண்டை அடைக்கிற குரலில்.

"தம்பி..."

"என்னங்கம்மா...?"

"நாங்க இனிமே அந்த வீட்ல யாருமே இருக்கப் போறதில்லை. அது வீடு இல்லை; சுடுகாடா மாறிட்டு வருது. அஜய்யோட காரியங்கள் முடிஞ்சதும்- நாங்க எல்லோருமே வால்பாறை எஸ்டேட்டுக்குப் போயிடறோம். கோயமுத்தூர் கல்யாணத்துக்கு போயிருக்கிற மதன், கோகிலா, ஜோதிக்கு இந்தத் தகவலைத் தெரிவிக்கணும். அவங்களை உடனே வரவழைக்கணும்."

"பொள்ளாச்சி போலீசுக்கு காரோட நம்பரைச் சொல்லி தகவல் அனுப்பியாச்சும்மா. இந்நேரம் காரை மடக்கி - விஷயத்தைச் சொல்லி திருப்பி அனுப்பி இருப்பாங்க."

லட்சணா விம்மிக்கொண்டே காரை ஓட்டினாள். "மிஸ்டர் விவேக்... நாங்க யாருக்கு என்ன செஞ்சோம்னே தெரியலை. எங்க குடும்பத்தை உன்னிப்பா குறி பார்த்து ஒவ்வொருத்தரையா தீர்த்துக் கட்டிட்டு வர்றாங்க. நீங்களும், இன்ஸ்பெக்டரும் எங்க வீட்ல இருக்கும்போதே... உங்க முதுகுகளுக்குப் பின்னாடியே என் அண்ணனைக் கொன்னு இருக்காங்க..."

"ஆளைக் கண்டுபிடிச்சுடலாம் மிஸ் லட்சணா..."

"எப்போ கண்டுபிடிப்பீங்க சார்...? எல்லாரையும் கொன்னு தீர்த்த பிறகா...?"– அழுகையினூடே கோபமாய் வெடித்தாள் லட்சணா.

அவளுக்கு பதில் சொல்வதற்காக இன்ஸ்பெக்டர் கோகுல்நாத் வாயைத் திறந்த நேரம் - முன்னால் போய்க்கொண்டிருந்த பிரேத வேன், ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தது. போர்டிகோ வாசலில் போய் நின்றது-

லட்சணா காரைக் கொஞ்சம் தள்ளி நிறுத்தினாள்.





விவேக்கும், கோகுல்நாத்தும் கீழே இறங்கி- வேனை நோக்கிப் போனார்கள். ஜெகதாம்பாள் கண்களில் வழியும் நீரோடு தளர்ந்து போய் இறங்கினாள்.

லட்சணா கூப்பிட்டாள். "அம்மா..."

"எ...ன்...ன... லட்சணா?"

"நீ ஆஸ்பத்திரியில இரு. நான் வீட்டுக்குப் போய் அப்பாவுக்கு துணையா இருக்கேன். 'போஸ்ட் மார்ட்டம்' முடிஞ்சதும் எனக்கு போன் பண்ணி சொல்லு... நான் வர்றேன்."

"அப்பாவுக்கு துணையா பங்களாவில ரெண்டு போலீஸ் இருக்கிறப்போ எதுக்காகப் போறே லட்சணா? எனக்கு மயக்கம் வர்ற மாதிரி இருக்கு. நீ என் கூடவே இரு..."- சொல்லியபடியே லட்சணாவின் கையைப் பற்றிக்கொண்டாள் ஜெகதாம்பாள்.

"இல்லேம்மா... நாம வீட்டைவிட்டு வர்றப்பவே அப்பா ரொம்பவும் இடிஞ்சு போய் உட்கார்ந்திருந்தார். இந்த நேரத்துல நாம யாராவது அவர் கூட இருக்கணும். நான் போய் அரை மணி நேரம் இருந்துட்டு உடனே வந்துடறேன்..."

"சீக்கிரமா வந்துடடி..."

ஜெகதாம்பாள் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே- காரை விருட்டென்று பின்னுக்கு எடுத்து- ஒரு விநாடி தயங்கி சர்ர்ர்ரென்று கிளப்பிப் போனாள் லட்சணா.

காலை நேரம் அவிழ்ந்து- ஜேக்கல்முடியின் ஆட்கள் இல்லாத சாலையில் காரை படுவேகத்தில் பறத்திக்கொண்டு போய்- பத்தே நிமிடத்தில் பங்களாவுக்குள் நுழைந்தாள். போர்டிகோ வாசல்படியில் காத்திருந்த துப்பாக்கி ஏந்திய காவலர்களை பொருட்படுத்தாமல், காரைவிட்டு இறங்கி- ஒரு சின்னப் புயலாய் ஹாலுக்குள் நுழைந்து- மாடிப் படிகளில் தடதடந்து- வராந்தாவில் பிரவேசித்து- அரை நிமிட வேக நடையில்-

அஜயின் அறைக்குள் நுழைந்தாள். இடுப்பில் சொருகி இருந்த சாவிக்கொத்தை உருவி பீரோவைத் திறந்தாள்.

வாசனையோடு பீரோ திறந்துகொள்ள- ஒவ்வொரு தட்டாய் மேய்ந்தாள். அஜய்யின் துணிகளை எல்லாம் தீவிரமாய் கலைத்து கலைத்து - தேடினாள். நெற்றியில் பொலுபொலுவென்று அரும்பிவிட்ட வியர்வை முத்துக்களை துடைக்கக்கூடத் தோன்றாமல்- குனிந்து- மண்டியிட்டு பீரோவுக்குள் இருந்த எல்லாவற்றையும் இழுத்துப் போட்டு தேட ஆரம்பித்தாள்.

ஒரு பத்து நிமிடத் தேடல்.

அந்த சின்ன பச்சை நிற டைரி அவள் கையில் சிக்க, முகத்தில் ஒரு பிரகாசம்.

பக்கங்களைப் புரட்டினாள். புரட்டிய வேகத்தோடு- சில பக்கங்களை

சரக்கென்று கிழித்து, அதை தன் மார்புப் பகுதிக்குள் தள்ளினாள். டைரியின் கடைசிப் பக்கத்தில் ஒட்டப்பட்டிருந்த- ஒரு பெண்ணின் புகைப்படத்தை அந்தக் காகிதத்தோடு சேர்த்துக் கிழித்துக்கொண்டாள். பழையபடி பீரோவுக்குள் எல்லாவற்றையும் தள்ளி- திணித்து- பீரோவை சாத்திவிட்டுத் திரும்பினாள்.

அதிர்ந்தாள்.

விவேக் அறை வாசலில்- மார்புக்கு குறுக்காய் கைகளைக் கட்டியபடி நின்றிருந்தான். உதட்டில் ஒரு புன்னகை.

"வி...வே...க்..."

"நீங்க என்னை எதிர்பார்க்கலை இல்லையா... மிஸ் லட்சணா?"

"வி...வே...க்..."

விவேக் சிரித்தான். "இந்த போலீஸ் துறை ரொம்பவும் மோசம் லட்சணா. அவங்களுக்கு சந்தேகம் வர்ற மாதிரி அவசரப்பட்டு நடந்துக்கக் கூடாது. நீ ஆஸ்பத்திரியைவிட்டு அவசர அவசரமா புறப்பட்டப்பவே நானும் ஆஸ்பத்திரி டாக்டர் ஒருத்தரோட ஸ்கூட்டரை வாங்கி உன்னை 'பாலோ' பண்ண ஆரம்பிச்சேன். ஆனாலும், நீ ரொம்பவும் வேகமாத்தான் காரை ஓட்டறே. லட்சணா... ஆமா, அண்ணன் அஜய்யை எதுக்காகக் கொன்னே? இதுக்கு முன்னாடி ரெண்டு ஆப்பாவைவர்கள், வாட்ச்மேன், எங்க துறையைச் சேர்ந்த பவித்ரன் இவங்களையும் எந்த காரணத்துக்காகக் கொன்னே...?"

"இல்ல..."- வீறிட்டாள் லட்சணா.

"என்ன இல்ல...?"

"நான் யாரையும் கொல்லலை..."

"நீ கொல்லலைன்னா... அஜய்யோட பீரோவைத் திறந்து எல்லாத்தையும் கலைச்சுப் போட்டு- ஒரு டைரியைத் தேடி எடுத்து- அதனோட சில பக்கங்களை மட்டும் கிழிச்சு ஜாக்கெட்டுக்குள்ளே எதுக்காக பதுக்கி வைக்கணும்? டைரியில ஒட்டி வெச்சிருந்த போட்டோவைக் கிழிச்சியே...? அந்தப் படத்தில் இருக்கிற பொண்ணு யாரு? உன்கிட்ட ஏதோ தப்பு இருக்கு லட்சணா..."

"அ...அ... அது... வந்து..."

"சொல்லு..."

பின் வாங்கினாள் லட்சணா.

"அந்தக் காகிதங்களையும், படத்தையும் கொடு லட்சணா. கொடுக்காம நீ அடம் பண்ணினா இந்த நிமிஷமே போலீஸ் ஸ்டேஷனுக்கு என்னால தள்ளிட்டுப் போக முடியும்..."

"வே...ண்...டா...ம்..."



"பின்னே சொல்லு..."

லட்சணா தன் மேலாடைக்குள் கையை நுழைத்து - டைரியில் இருந்து கிழித்த காகிதங்களையும், அந்தப் படத்தையும் விவேக்கிடம் எடுத்துக் கொடுத்தாள்.

முதலில் படத்தைப் பார்த்தான் விவேக்.

மனசை நொறுங்கடிக்கிற அழகோடு அந்தப் பெண், படத்தில் சிரித்தாள். படத்தின் பின் பக்கத்தைத் திருப்பினான். 'வித் லவ்' என்கிற வாசகத்தோடு 'ரூபிகா' கையெழுத்து.

விவேக், லட்சணாவை ஏறிட்டான். மெல்லிய குரலில் கேட்டான்.

"யார் இந்த ரூபிகா...?"

"டாப் ஸ்லிப் எஸ்டேட் அதிபர் குமரகுருவோட மகள்...!"

"அந்த ரூபிகாவுக்கும், அஜய்க்கும் என்ன தொடர்பு...?"

"ஒருத்தரை ஒருத்தர் விரும்பினாங்க..."

"அஜய்க்கு கல்யாணமாகி இருக்கே... ரூபிகாவுக்கு அது தெரியுமா...?"

விவேக்குக்கு லேசாய் புரிகிற மாதிரி இருந்தது. மெல்லிய குரலில் கேட்டான்.

"அஜய் ரூபிகாவை கல்யாணம் செய்துக்க ஆசைப்பட்டப்போ - அவனுடைய முதல் மனைவி குறுக்கே நின்னிருக்கா... இல்லையா... லட்சணா?"

"ம்..."

"நான் சேகரிச்ச தகவல்கள்படி லீலாவதி ரொம்பவும் சாதாரணமான குடும்பத்தைச் சேர்ந்தவள். தேயிலைப் பறிப்புக்கு வந்த அந்த லீலாவதி மேல ஆசைப்பட்டு அஜய் கல்யாணம் பண்ணிகிட்டப்போ... உன்னோட அப்பா அம்மாவைத் தவிர - இந்த வீட்ல வேற யாருக்குமே இஷ்டமில்லை... அப்படித்தானே...?"

"ஆமா..."

"சரி... லட்சணா... இப்போது விஷயத்துக்கு வருவோம்... உன் கூடப் பிறந்த அண்ணனை எதுக்காக கொலை பண்ணினே...?"

"நா... நான்... பண்ணலை..."

"பின்னே... யாரு...?"

லட்சணா மவுனம் சாதித்தாள்.

"உனக்கு இங்கே பதில் சொல்ல பிரியமில்ல போலிருக்கே... ஸ்டேஷனுக்கு போயிடலாமா...? நான் ஜீப்புக்கு போன்ல சொல்லி விடட்டுமா...?"

"வேண்டாம்... மிஸ்டர் விவேக்..."

"அப்போ உண்மையை இங்கேயே சொல்லிடு..."

லட்சணா தன் காய்ந்து போன உதடுகளை லேசாய் ஈரப்படுத்திக்கொண்டு சொன்னாள். "மிஸ்டர் விவேக்... மூன்று மாசத்துக்கு முன்னாடி ஒரு நாள்- லீலாவதி உயிரோட இருந்த நேரம்- என்னோட மதன்- சின்ன அண்ணி கோகிலா மூணு பேரும் இதே அறையில உட்கார்ந்து கிசுகிசுன்னு பேசிட்டிருந்தாங்க... நான் எதேச்சையா அந்தப் பக்கம் போனபோது அவங்க பேசற விஷயம் என்னோட காதுல விழுந்தது. லீலாவதியை ஏதாவது ஒரு ஊசி போட்டு அவ கதையை முடிச்சுட்டு- மூணு மாசம் கழிஞ்சதும்- டாப் ஸ்லிப் அதிபர் பொண்ணு ரூபிகாவை அஜய் கல்யாணம் பண்ணிக்கப் போகிற விஷயமாய் அவங்க மூணு பேரும் பேசிட்டிருந்தாங்க.

நான் உடனே ரூமுக்குள்ளே நுழைஞ்சதுமே திகைச்சுப் போனாலும் - சீக்கிரமே என்னையும் அவங்க வழிக்கு இழுக்கப் பார்த்தாங்க... என்னோட அண்ணன் அஜய், 'நான் லீலாவதியை ஆசைக்காக கட்டிக்கிட்டேன்... இப்போ இன்னொருத்தி ஏகப்பட்ட சொத்தோட என்னை விரும்பறா. அந்த ரூபிகா ஆஸ்தியோட நம்ம வீட்டுக்கு வரணும்னா லீலாவதி சாகத்தான் வேணும்'ன்னு அடிச்சு சொன்னார்.

அடுத்த வாரம் நான் எங்கோ வெளியூர் போயிருந்த நேரம், லீலாவதிக்கு விஷ ஊசி போட்டு கொன்னுட்டார் அஜய். விஷக் காய்ச்சல் வந்து லீலாவதி செத்துப் போனதா ஊர் பூராவும் செய்தியைப் பரப்பி விட்டாங்க. அஜய் பாசாங்குத்தனமாக அழுது- ஆர்ப்பாட்டம் பண்ணி - லீலாவதியிடம் தனக்கு இருக்கும் பாசத்தைக் காட்டிக்கொள்வதற்காக பங்களாவுக்கு பின்னாடியே அவளை அடக்கம் பண்ணச் சொன்னார். வாரம் பத்து நாள் துக்க வேஷம் போட்டு, லீலாவதியின் சமாதி மேல் - அவளுடைய உருவச் சிலையையும் வைத்தார்."

லட்சணா மூச்சு வாங்குவதற்காக – கொஞ்சம் பேச்சை நிறுத்தினாள். விவேக், "ம்... அப்புறம்...?" என்றான்.

"என்னோட அம்மாவுக்கும், அப்பாவுக்கும் இந்த விஷயம் தெரியாது. போலீசுக்கு விஷயம் தெரிஞ்சா... குடும்ப கவுரவம் பாழாயிடும்னு நினைச்சு... நானும் விஷயத்தை மனசுக்குள்ளேயே வெச்சுக்கிட்டேன்... ஆனால், லீலாவதியை விஷ ஊசி போட்டு கொன்ன விஷயம் அப்போ எஸ்டேட் சூப்பர்வைஸரா இருந்தவருக்கு எப்படியோ தெரிஞ்சிருக்கு... அவர் அண்ணனை 'பிளாக்மெயில்' பண்ண ஆரம்பிச்சார். உடனே சின்ன அண்ணன் மதன் அவுட் ஹவுஸ் சுவிட்ச் போர்டில் சில சில்மிஷங்களைப் பண்ணி – அந்த சூப்பர்வைஸர் சுவிட்ச் போட கையை வைத்ததுமே – மரணம் அவரை தழுவிக்கும்படியா பண்ணிட்டார்.

அவருக்கு அடுத்தபடியா ரெண்டாவதா வந்த சூப்பர்வைஸர் நிஜமாவே ஆத்துல குளிக்கும்போது மூழ்கி இறந்துட்டார். இவர்னு ஒரு வாரத்துக்கு முந்தி வாட்ச்மேன் இழவன் மேல் - பெரிய அண்ணன் அஜய் சந்தேகப்பட்டார், மதனிடம் யோசனை கேட்டார். 'சந்தேகம்னு வந்த பிறகு ஆள் உயிரோட இருக்கக் கூடாது. முடிச்சிடு'ன்னு சின்ன அண்ணன் சொன்னார். பெரிய அண்ணன் கச்சிதமா வேலையை முடிச்சுட்டார்..."

அறையில் சிறிது நேரம் மவுனம் நிலவியது.

பிறகு தொடர்ந்தாள் லட்சணா. "வாட்ச்மேன் செத்த அன்னிக்குத்தான் பவித்ரன் வேலைக்குச் சேர வந்தார். அவர் எஸ்டேட் கார்டனுக்கு போயிருந்த நேரம், அவரோட பெட்டியை அலசி- அவர் போலீஸ் என்பதை அடையாளம் கண்டுகொண்ட அஜய்- அன்னைக்கு சாயந்தரமே பவித்ரனுக்கு மரணம் சாசனம் எழுதி முடிச்சார்..."

விவேக் உதட்டில் இருந்த சிகரெட்டை பற்ற வைத்து- அடர்த்தியாய் புகை விட்டான்.

கேட்டான். "இப்போ... அஜய்யை கொன்னது யார்...?"

"அதான் தெரியலை மிஸ்டர் விவேக். அஜய் கொலை சம்பந்தமா நீங்க புலன் விசாரணை நடத்தறப்போ... கண்டிப்பா இந்த அறையைக் கிளறிப் பார்ப்பீங்க. அப்போ உங்க கைக்கு இந்த டைரி கிடைக்கும். இது மூலமா ரூபிகா விஷயம் வெளிப்படும். சின்ன அண்ணன் மதனும்- அண்ணி கோகிலாவும் பாதிக்கப்படலாம்னு நினைச்சுதான் உங்களுக்கு முன்னாடி இந்த டைரியை எடுக்க வந்தேன். ஆனா துரதிர்ஷ்டம்... என்னோட அவசரம்... மாட்டிகிட்டேன்..."

"மதனோட அறை எது...?"

"வாங்க... காட்டுறேன்..."- லட்சணா கூட்டிக்கொண்டு போனாள்.

தொடர்ந்தான் விவேக். வராந்தாவில் தென்பட்ட அந்த இரண்டாவது சின்ன அறையைக் கடக்கும்போது சட்டென்று 'பிரேக்' போட்ட மாதிரி நின்றான்.

முன்னால் நடந்துகொண்டிருந்த- லட்சணா திரும்பி நின்று கூப்பிட்டாள்.

"வாங்க..."

"ஒரு நிமிஷம் லட்சணா..."

"என்ன...?"

"இந்த அறை யாரோடது?"

"ஜோதி படிக்கிற அறை..."

"உள்ளே பார்த்துட்டு போலாம்..."- என்று சொல்லிக்கொண்டே அறைக் கதவைத் தள்ளி- உள்ளே நுழைந்தான்.

"குழந்தை ஜோதியோட அறையில என்ன இருக்கும் மிஸ்டர் விவேக்?"

லட்சணா கேட்க - சுட்டு விரலை கதவின் மேல் காட்டினான் விவேக்.

லட்சணா பார்வையைப் போட-

அதிர்ந்தாள்.

கதவின் மேல்புறத்தில் கோடாய் வழிந்த ரத்தக்கறை.

## 15

இருவரும் ஜோதியின் அறைக்குள் நுழைந்தார்கள்.

சிறிய அறை. சாய்வாய் ஒரு மேசை. விளக்கு. புத்தகங்கள் வைக்க ஒரு அலமாரி. துணிகள் வைக்க ஒரு பீரோ.

விவேக் அறையை உன்னிப்பாய் பார்த்தான். காய்ந்து போன ரத்தத்துளிகள் நான்கைந்து தெரிந்தன. பீரோ அருகே வந்த விவேக்கின் பார்வையில் - பீரோவுக்கு அடிச் சந்தில் நீட்டிக்கொண்டிருந்த அந்த துணி வார் பட்டது.

இழுத்தான். சிரமமாய் பிதுங்கிக்கொண்டு வெளிப்பட்டது அந்த ஜோல்னா பை. அது வெளிப்படும்போது 'ஜல் ஜல்' என்ற சத்தம்.

மண்டியிட்டு உட்கார்ந்தான் விவேக்.

பையைத் தலைகீழாக கவிழ்த்துக் கொட்டினான். கொட்டின பொருள்களைப் பார்த்ததுமே- விவேக்கும், லட்சணாவும் திடுக்கிட்டார்கள்.

ரத்தம் காய்ந்தும் காயாத- தோட்டச் செடிகளை வெட்டும் நீளமான கத்திரி. சலங்கை கட்டிய கொலுசுகள். ஒரு அகல் விளக்கு. புகைப்படம்.

அந்தப் படத்தைக் கையில் எடுத்தான் விவேக்.

ருத்ரய்யாவின் குடும்பப் படம் அது.

ருத்ரய்யாவும், ஜெகதாம்பாளும் நாற்காலிகளில் உட்கார்ந்து புன்னகைக்க - அவர்களைச் சுற்றிலும் அஜய், லீலாவதி, மதன், கோகிலா,



லட்சணா, ஜோதி நேர்ப் பார்வையோடு தெரிந்தார்கள். அஜய், மதன், கோகிலா முகங்களில் பென்சிலால் பெருக்கல் போடப்பட்டிருந்தது.

படத்தை பின் பக்கமாய் திருப்பினான் விவேக்.

கோணல்மாணலான எழுத்துகளில் - 'அம்மா... உன்னைய கொன்னவங்களை நானும் கொல்லுவேன்... மொதல்ல அப்பா... அப்புறம்... சித்தப்பா, சித்தி...'

விருட்டென்று எழுந்தான் விவேக்.

"லட்சணா... ஜோதியோட மனசுக்குள்ளே ஒரு பிரளயமே நடந்திட்டிருக்கு. நீங்க யாருமே கவனிக்கலையா? தன்னோட அம்மாவைக் கொன்னதை அவ நேர்ல பாத்திருக்கணும்..."

"ஜோதிக்கு அம்மா மேல ரொம்பவும் அதீத பாசம் மிஸ்டர் விவேக். ஆனா, லீலாவதி அண்ணி இறந்தப்போ அவ அழலை. வெறிச்சு பார்த்துகிட்டே உட்கார்ந்திட்டிருந்தா. ஒரு வாரம், பத்து நாள் அவ யார் கூடவும் பேசவும் இல்லை... சரியா சாப்பிடவும் இல்லை. ராத்திரி எட்டு மணி வரைக்கும்கூட சமாதியிலே உட்கார்ந்திட்டிருப்பா. அது துக்கம்னு நான் நினைச்சேன். ஆனா, இப்பத்தான் தெரியுது... அது வெறின்னு! வெளியே சிரிச்சுப் பேசிக்கிட்டே அந்த சின்னப்பூ மனசுக்குள்ளே எரிமலையா கொந்தளிச்சுட்டு இருந்திருக்கா..."

விவேக் பரபரத்தான்.

"லட்சணா... இப்போ பேசிட்டிருக்க நேரமில்லை. மதனும், கோகிலாவும் ஜோதியை கூட்டிக்கிட்டு கார்ல போயிருக்காங்க. ஜோதியாலே அவங்க ரெண்டு பேருக்கும் ஏதாவது ஆபத்து வரலாம்..."

தடதடவென்று ஓடினான் விவேக். மூலையில் இருந்த தொலைபேசியை நெருங்கி - ரிசீவரை எடுத்து எண்களை அழுத்தினான்.

"ஹலோ... போலீஸ் ஸ்டேஷன்."

"எஸ்..." - மறு முனையில் இன்ஸ்பெக்டர்.

"மதனோட கார் சம்பந்தமா ஏதாவது தகவல் கிடைச்சுதா...?"

"இல்லை சார்..."

விவேக் படபடத்தான். "வழியில் இருக்கிற எல்லா 'செக் போஸ்ட்'களுக்கும் தகவல் கொடுங்க. அவசரம்... அந்தக் குழந்தை ஜோதியாலே மதனுக்கும், கோகிலாவுக்கும் ஏதாவது ஆபத்து ஏற்படலாம்."

"ஜோதியா...?"

"ஆமா... ஜோதி இப்போ இயல்பா இல்லை. அப்பாவைக் கொன்னுட்டு - ஒண்ணும் தெரியாத பூனை மாதிரி தன் பாட்டிகிட்டே

படுத்து தூங்கிட்டு – ஒரு சாது மாதிரி மதனோடும், கோகிலாவோடும் புறப்பட்டுப் போயிருக்கா... அவ இப்ப ஆபத்தான குழந்தை..."

# 16

கார் மலைச் சிகரங்களுக்கு மத்தியில் – நாடா மாதிரியான மெலிந்த சாலையில் – ஸ்பீடா மீட்டர் எண்பதைக் காட்டியது. சூரிய வெளிச்சம் காவி நிறத்தில் கிழக்கில் தெரிந்தது.

"கொஞ்சம் மெதுவாப் போங்களேன்..." என்றாள் கோகிலா.

மதன் விசிலடித்தான். "ஏன்... பயமா இருக்கா?"

"நான் பயப்படலை. ஜோதியைப் பாருங்க... எப்படி ஒடுங்கிப் போய் உட்கார்ந்திருக்கான்னு..."

மதன் பார்த்தான். "என்ன ஜோதி, பயமா இருக்கா...?"

"ம்ஹூம்... இன்னும் கூட வேகமா போலாம் சித்தப்பா..."

மதன் சிரித்தான். "அப்படிச் சொல்லு ஜோதி!"

அவள் கன்னத்தைத் தட்டிக் கொடுத்தான். வேகத்தைக்கூட்டி மூன்றாவது வளைவைக் கிறீச்சென்று கடந்தான். ரொம்பவும் கீழே... பாறைகளும், கற்களுமாய் சமவெளி தெரிய- கோகிலாவின் வயிற்றுக்குள் ஐஸ் கட்டிகள் பயணப்பட்டன.

கீழே விழுந்தால்...

"சித்தப்பா..."– மதனின் தோளைத் தட்டினாள் ஜோதி.

"என்ன...?"

"காரை அந்த வளைவுக்கு பக்கமாய் கொண்டு போய் நிறுத்துங்களேன்..."

"எதுக்கு...?"

"அவ்வளவு உயரத்தில் இருந்து கீழே பார்த்தா 'திரில்லிங்'கா இருக்கும்... மரம் சின்னச் சின்னக் குடையா தெரியும்..."

"வேண்டாம்மா... நமக்கு நேரமாச்சு."

"அஞ்சே நிமிஷம்!"

"சரி..."– காரின் வேகத்தைக் குறைத்தான் மதன்.

சாலையோர வளைவுக்கு பக்கமாய் கொண்டு போய் நிறுத்தினான்.

"எஞ்சினை அணைக்காதீங்க சித்தப்பா. கார்ல இருந்தபடியே



பார்த்துட்டுப் போயிடலாம். நான் 'டிரைவிங் சீட்' பக்கமாக ...த்துடறேன்..."

பின் இருக்கையில் இருந்த கோகிலா சலித்துக்கொண்டாள். "இவளைக் கல்யாணத்துக்கு கூட்டிக்கிட்டு வந்ததே தப்பு. நாம கோயமுத்தூர் போய் சேர்றதுக்குள்ளே– கல்யாணம் முடிஞ்சுடும்..."

"ஸாரி சித்தி... இன்னும் நாலே நிமிஷம்..."

'டிரைவிங் சீட்'டில் இருந்து எட்டிப் பார்த்தாள் ஜோதி.

செங்குத்தலான பாறைச் சரிவுக்குக் கீழே... வளர்ந்திருந்த பெரிய மரங்கள்– சின்னச் சின்ன குற்றுச் செடிகளாய் தெரிந்தன.

"சித்தப்பா..."

"ம்..."

"நாம மூணு பேரும் இங்கே இருந்து கீழே விழுந்தா எப்படி இருக்கும்?"

கோகிலா வெடித்தாள். "ஏய் சனியனே... வாயை மூடிக்கிட்டு சும்மா இருடி. உங்க அம்மா போன இடத்துக்கு நீ வேணுமானாலும் போ... நாங்க வரலை..."

ஜோதியின் குரல் திடீரென்று மாறியது. கரகரத்தாள். முகத்தைப் பயங்கரமாக வைத்துக்கொண்டு சொன்னாள்.

"உங்களையும், சித்தப்பாவையும் கூட்டிட்டு வர்றதாதான் எங்க அம்மாகிட்டே சொல்லி இருக்கேன்..."

"என்னடி உளர்றே...?"

"நிஜமாத்தான் சித்தி... போலாமா?"

"என்னங்க... இவ இப்படிச் சொல்றா!"– திரும்பி மதனை ஏறிட்டாள் கோகிலா. அவன் கலவரமாகி வியர்த்த அதே விநாடி–

ஜோதி 'ஆக்ஸிலேட்டரில்' காலை வைத்து அழுத்தினாள்.

கார் 'குபுக்'கென்று முன்னால் போக–

"ஏ... ஏ... ஏ... ஏ... ஏய்ய்ய்ய்ய்ய்... ஜோதீஈஈஈஈஈஈ..."– மதன் வீறிட –

"அம்மா... ஆ... ஆ... ஆ... ஆ..." என்றாள் ஜோதி. சந்தோஷமாய் கெக்கலித்து – வெறி பிடித்த மாதிரி சிரித்தாள். கார், வானவெளியில் நீந்தி –

தன் முதல் உருளலை ஆரம்பித்தது.

**(முற்றும்)**